In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

சிவானந்த மாலை

கடவுள் வாழ்த்து

பீடுதருங் காளத்தி பேறுங் கடகளிறே
தேடுமிடம் வாடுமிடம் செல்லுமிடம் — நீடுபகல்
இங்சந்தி யானேனும் தோன்றாத முத்திபெற
அங்சந்தி யானே யவன். (1)

சிட்டியதோர் செங்கையும் சிட்டாத செங்கையினில்
வட்டில் நிறைந்து வழிபாறும் — கிட்டியதோர்
சேலையுடன் சீராவும் செம்பொற் றிருத்தண்டைக்
காலையுமென் கண்குளிரக் காண். (2)

சும்மா விருப்பவர்பால் தோன்றும் சுடரொளியைப்
பெம்மான் சிவனென்ற பேராளா — அம்மை
முலையுண் டமுத °முதல்வா பிறப்பில்
அலையுண் டலைந்தேன் அற. (3)

பாடபேதம் : °முனிவா.

ஈசன் இரவலாற் கிட்டவொண்ணா இன்பத்தை
மாசறவோர் அங்குலியால் வாழ்வித்த — தேசமிகும்
தொண்டர்க்கா நிம்பத்தின் தோணிபுரத் தோன்றலவன்
திண்டைக்கால் என்றன் சிரண். (4)

நேயத்தே நின்றபடி நில்லாமல் இன்றளவும்
மாயத்தே நின்று மயங்கினேன் — காயப்
பவமென்று தீரும் பராபரனைப் பெம்மான்
சிவனென் றவனே இனி. (5)

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும்எம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் — முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங் கே. (6)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏதமுறும் மும்மலங்கள் இல்லா வினைவிளைத்த
வாதனைகள் போநீர் மயங்காமல் — பாதமலர்
சேர்த்தானென் சென்னிமிசை தீரனைக்கானைப்
பார்த்தானெங் கைக்களத்திப் பன். (7)

நீயிருக்க என்னறிவின் நான்பட்ட நிட்டூரம்
நீயிருக்குங் கையாவென் செய்புகேன் — போயகலப்
பாவனைசெய் வார்க்கரிய பாதா சிவாயசிவ
தீவினையி லேயறவொர் தேன். (8)

வேறுபடாப் பேரின்ப வெள்ளத் தழுந்தியவெட்
பேறுபெற யான்முயன்ற பித்தேதோ — மாறற்றேற் (ஏ)
அண்மைப் பயனான அத்துவிதா னந்தாவென்
உண்மைப் பயனை யுரை. (9)

மன்றுனடம் கொண்டசிவன் மாதுமைகண் டுள்ளுருக
நின்றுநடம் செய்யுமது நீதியாம் — என்றும்
அருந்தா விடமருந்தும் ஆரேறைப் போல்
இருந்தாடு வாரிங் கிலை. (10)

தின்றுண்மை தானே அநுபவிக்கும் தின்மைபோல்
என்றுண்மை தானாக இன்புற்றேன் — புன்னெறியை
வாட்டுமரு போதர்க்கு வாழ்வாய வாழ்முதலைக்
காட்டியகா ரிக்கற்ப கம். (11)

மெய்போ லிருப்பதே மேதினியும் வானுலகும்
பொய்போ லிருப்பதே பூரணமே — மெய்போலும்
பொய்போலும் தோன்றுதன் பூரணமே பூரணமாஞ்
செய்போதன் றேநீ சிவம். (12)

கையறியா இந்திரியக் கள்வரெல்லாம் உள்புகுந்தென்
மெய்யறிவைக் கொள்ளைகொள்ள விட்டேனே — பொய்யறிவின்
பொய்ப்பாச மேலிடவென் போதத்தி லேபுகுந்து
இருப்பதே தெய்வமே நீ. (13)

பொய்யுறைப்பின் கேதனத்தை மெய்யாகப் புத்தியிலிட்
டுய்யுநெறி காணா துழைவெடுத்தேன் — ஐயனே
எல்லா உருவுமொரு வார்த்தையிலே யில்லையதாய்ச்
சொல்லாத சொல்விழியாற் சொல். (14)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேனிபுள கார்கியிலைக் காழுசா மித்தையுடல்
தானகல வன்னையினித் தாராயோ — யானெனதில்
கூடாத மெய்ப்போதம் கூடக் கொடுவினைபோய்
கேடாய் போதம் கெட. (15)

நூற்பெயர்

புன்னூல் பலவிதற்றிப் புத்தகப்பே யாகியவென்
முன்னூல் உணராத மாறுகேள் — இந்நூலின்
பேர்சிவா னந்தப் பெருங்கடலுட் பேரமுதம்
ஆர்சிவா னந்தமா லை. (16)

அவையடக்கம்

பாசம் சிவனை அநுபவிக்கப் பாவிக்கும்
நேசம் தனக்கு நிகராகும் — காசினிமேல்
நன்மார்க்கம் ஒன்றுமிலா நானும் பெரியோர்முன்
சன்மார்க்க நூலுரைத்தல் தான். (17)

சரியை

சரியைகேள் முன்னொருத்துத் தண்மெழுக்கிச் சாத்தி
விரைமலர்கொய் திட்டுவிளக் கிட்டுப் — புரைதீரப்
பாடிப் பணிந்து பரவிப் பலகாலும்
தேடிக் கிசைந்து திரி. (18)

காலைதொழ அன்றைவினைக் கட்டகலும் கட்டுச்சி
வேலைதொழ இப்பிறப்பின் வெவ்வினைபோம் — மாலையினில்
வந்துசிவ லிங்கத்தை வந்தித்தால் ஏழ்பிறப்பின்
வெந்துயர மெல்லாம் விடும். (19)

கிரியை

கிரியைகேள் பூநீரும் கேடிலமு தங்கொண்(டு)
அருகதா பந்தூபம் ஆரம் — விரையநீர்
உள்ளாஞ்சு சித்திசெய்தா வாகித்தோ மஞ்செய்து
கொள்ளஞ் செழுத்தால் குறி. (20)

நற்குலந்தி அற்பணித்து நாதனடித் தாமரைப்போ(து)
அர்ச்சனைக்கிப் பேறுபெறு வம்முறைமை — பொற்கலத்தின்
மண்ணிட்டன் மாமணியால் நாய்கடிதல் வானமுதம்
திண்ணிட்டுத் தான்விளக்கல் தான். (21)

சிவலிங்கதரிசனம்

ஓங்கார பீடம் மகாரமுயர் கண்டமேல்
பாங்கா நகாரம் பயில்பீடம் — ஆங்குண்
மகார மிருவட்டம் மன்னுதிலை விந்துப்
பகாதசிவம் நாதமெனப் பார். (22)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யோகம்

யோகங்கேள் உள்ளம் புலனைடக்கி ஓடுமிரண்
டாகும் வளியடக்கி ஆறேறி — ஏகமாய்
உள்ளத்தைக் கொண்டுபோய் ஒன்றுவிலா வடத்தே
வெள்ளப் பதிமீ விரைந்து. (23)

ஞானம்

ஞானங்கேள் வேதா கமமுணர்ந்து நன்றாக
ஆன பதிபசுபா சங்களறிந்து — ஈனமிலா
நின்மலனை நாடி நினைப்பும் மறப்புமிலா
நன்மனமாய் வாழும் நெறி. (24)

நன்னெறிக் கன்பில்லாத் தாய்மார் தன்பயனும்
அன்னீரமும் மாறிடுவோன் நன்னலமும் — வன்பாம்
சரியைகிரி யாயோகத் தன்மையற்று முன்மைக்
கிரியவற்று மெய்ப்பென் றுணர். (25)

மெய்ஞ்ஞான மில்லாத பாதத்தில் வீட்டடைதல்
மெய்ஞ்ஞானம் வீட்டதனைத் தான்விளம்பில் — எஞ்ஞான்றும்
பொற்புடைய பூமிக்கீழ்ப் போயடையும் மட்பாடையும்
கற்பாடையும் போலவே காண். (26)

1. போயழியும் (பா-பே)

ஞானபாத விசிட்டம்

யானறியா மூர்த்திநலம் எட்டாதாய் மீளுமெய்ஞ்
ஞானமய வேதாகமமே ஞானறிவின் — ஞானமுயல்
காலிழைந்த கள்ளோடே எய்கினுயிற் கிற்றுணர்ந்தீர்
தோல்மிழ்ந்த வேதுபோ ஆம். (27)

நித்திய முறைமை

காலம் நியதி கலைமுன்றும் சித்தவித்தை
ஏலமதும் சித்த விராகத்தைக் — கோலியே
ஏசிர் செறுத்துவார் மாயைக்கு தல்லசிவ
மாய்புடன் சாதாக்கியம். (28)

சித்தம் சிவமிரண்டும் தோன்றியிடும் ஞானத்தில்
சந்திசா தாக்கியமும் சார்கிரியை — தீக்ஷைநடம்
ஏசர்த்தனை யம்முன்றும் என்றுமறை யாப்பரைக்கிவ் (கு)
ஆதிலடை நற்சிவமே யாம். (29)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தத்துவ சுத்தி

விரிந்தசித் தங்கிடந்து மேற்சித்தா சித்தம்
தெரிந்துமிகச் சித்த வந்தத் — திருந்த
ஒருவனன்றி வேறென்றப் போற்றுவா ருண்மை
இவனன்றி யேநின்ற நிலை. (30)

கீழாலவத்தை

சாக்கிரத்தே நிற்பதுவும் போவதுவும் சாற்றக்கேள்
வாக்கு வசனாதி வாயுக்கள் — நீக்கும்
கலாதியுடன் மண்ணாதி வித்தாதி காணொன்
றிலாதவான் சொன்னான் எனக்கு. (31)

நின்ற இருபதுக்கும் நாமம் நிகழ்த்தியடின்
வன்றிறன்ஞா னேந்திரியம் வாக்காதி — ஒன்றியிடும்
சித்தாதி யந்தக் கரணங்கள் சார்புடன்
ஒத்தா னுயிருடனே யுற்று. (32)

மேலாலவத்தை

மூலமுடன் நாபியிதயங் கண்டம் முன்னேற்றிப்
பாலதினிற் நிற்கிலவை நான்பார்க்கில் — காலவைகள்
ஒன்றிரண்டே டொன்றுமிகு பத்திரண்டு பத்துமுயிர்
நின்றனதீ தாதியவத் தை. (33)

ஒன்றிலதீ தந்தெரியும் ஓரிரண்டிற் றன்துரியம்
நின்றதொடு மூன்றின் நிகழ்சுழுத்தி — ஒன்றாக
நாலிலறி யுங்கனவை நாடைந்திற் சாக்கிரமாம்
பாலவத்தை காணும் படி. (34)

மத்தியாலவத்தை

போதந் தனக்குப் பொருந்தும் இடையவத்தை
ஏதென்று மாறு இயம்பக்கேள் — யாதொன்றை
நோக்கி மறந்தறியும் நுண்மையினில் நீப்புதல்
சாக்கிரத்தில் ஐந்தவத்தை தான். (35)

நின்மலாவத்தை

தற்காண்டல் சாக்கிரமாம் தற்பரையே சொப்பனமாம்
தற்காணா வெற்றவெறுத் தற்பரையே — நற்சுழுத்தி
ஞானனாந் தீந்துரியம் ஞானசிவ பூரணத்தே
தானாகை யுண்மையதீ தம். (36)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கேவல சகல சுத்தம்

ஒன்றுமற நின்ற இருள் கேவலமாம் உற்றசடம்
ஒன்றுமுதல் சகலம் சுத்தம் கேள் — பொன்றவினைத்
தானத் தொழிலுரையால் உற்ற இருவினைகள்
தானொத்தல் சத்திநிபாதம். (37)

வாக்கு நாலு

நல்லுணர்வாய் உள்ளொளியாய் நாதமாம் சூக்குமைதான்
சொல்லுமயில் அண்டசலம் சூக்மாதி — மல்கியிடும்
பைசந்தி மத்திமைசொற் பான்மைதெரி வண்ணமதாம்
வைகரிகேட் கும்செவியில் வந்து. (38)

நால்வகைச் சத்தி நிபாதம்

பேசும் பரிபாகமாகும் பிரமசத்தி
ஆசறவோர் காலத் தணைந்ததற்பின் — தேசார்
வியத்தி இலைமுதலாய் நேர்நிறுத்தல் இன்மைப்
பயன்விளையா தொத்தவிடம் பார். (39)

நாலுவகைச் சத்தி நிபாதத்தின் நற்பருவம்
மூல நிதவே மொழியெனக்குக் — கோல
அரம்பைத்தண் டொண்பச்சைக் காட்ட மலர்காட்டம்
நிரம்புகரி நேராய் நினை. (40)

கண்ணியகற் பாவை இரும்பிற் செறிபாவை
பண்ணுமரப் பாவை பச்சைமண்ணால் — பண்ணியதோர்
பாவையரக் கீப்பாவை பால்தோய்த் தெடுத்தவெண்ணெய்ப்
பாவையிவை போற்பருவம் பார். (41)

மந்ததரம் மெய்யாதி பொய்தோன்றல் மந்தம்கேள்
அந்தமிலா அச்சம் அவையறுத்தல் — பந்தமிகு
தீவிரங்கேள் மெய்ஞ்ஞானம் முன்னிரண்டும் தீர்த்தெழும்
தீவ்ரதரம் மெய்விளைவாய்த் தேர். (42)

சத்தி நிபாத விசிட்டம்

ஞானி நின்றவுடல் தானல்லா தாகிவிடும்
வானும் வையமும்பொய் வையமதாம் — ஞானமயற்
கிட்டமதாய் எப்பொழுதும் எல்லையற எல்லையினை
விட்டதுவே வீடாய் விடும். (43)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூலிப் பிணஞ்சுமப்போர் கூடும் பிணக்காட்டில்
ஏலக் கொடுபோய் இடவிடும்பிச் — சாலவிகழ்ந்
தேகமா போவுணர்ந்தோர் ஏசறவே நிற்பதல்லால்
ஆகமாய் நில்லார் அவர். (44)

ஏறுமுதல் இல்லாப் பே ரின்பமே யாவதல்லால்
சோறுதின்னும் காலம் தொலையாதோ — 'கூறுமுறைக்
கெட்டா அகண்டபரி பூரணனே யாவையினும்
நட்டாப் பே ரானந்தம் நா. (45)
(பா-பே) 1. கூறுமறைக்.

ஆதை பேரின்பம் ஆகியே நிற்பதல்லால்
ஊனாகி நின்றிடுநாள் ஓயாதோ — ஞானகோச்
சிற்குணனே சின்மயனே சிற்பரனே தேசிகனே
நிர்க்குணனே ஆனந்த னே. (46)

கொண்டாட்டும் இந்திரியக் கூட்டத் தெண்மறந்த
திண்டாட்டம் நாளொருநாள் தீர்ந்திடுமோ — அண்டரெல்லாம்
தேடுவாய் செம்பொன்னின் அம்பலத்தே தித்தியென
ஆடுவாய் நீயே அறன். (47)

நண்ணும் கருவியெல்லாம் நானாகா தொன்றென்றாய்
எண்ணியவை நானல்ல என்னேனே — பொன்றுதலோ(டு)
இன்னதெனா மன்றின்கண் நின்றிடும் என்துணையே
நின்னதெனால் வேறாகி நின்று. (48)

பொய்க்குரு

சேமலிப்பால் சித்தித்தல் மின்மினியால் தீக்காய்தல்
காமிகம் வேலைக் கலம்செலுத்தல் — ஆமையிர்ப்
போர்வையினால் கூதலறப் போர்த்திடுதல் பொய்க்குருவின்
பார்வையினால் ஆய பயன். (49)

வாளா மருட்போத மன்றிமலப் போதத்தால்
கோளார் கருவியெல்லாம் கூறுசெய்தல் — கேளாய்
குருட்டரிப்பன் மண்ணையெல்லாம் கூறுசெய்து பொன்னை
அரித்தெடுப்பன் ஆமாறில் ஆம். (50)

நற்போத மில்குரவர் சார்ந்தவர்க்குச் சங்கையறச்
சிற்போதம் காட்டித் தெளிவுசெய்தல் — நிற்செவிடாம்
வாக்கிலிதன் வாய்திறந்து வாட்டமறச் செவ்வழிதான்
நோக்கிலிக்குக் கூறுதல்மா னும். (51)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மெய்க்குரு

சின்மயனார் நம்போல் திருமேனி கொண்டவரின்
என்மனதால் இவ்வன் இயம்பக்கேள் — நன்மகன்தான்
மேவு கிணறுபுக மெய்யான நேயத்தால்
ஏவலில்வீழ் தாய்போற் குரு. (52)

வாராது வந்திலனேல் என்னும் மலநசிப்பும்
தீராத மெய்யருளும் தீர்ப்பரையாம் — பேராத
சித்தியுந்தான் அற்றதிலே தண்ணிறைவும் தன்னிறைவின்
முத்தியும் பே ரானந்த மும். (53)

பூணுமடி கார்களிகூர் போகத்தில் வீழ்ந்தவன்
காணுமன வும்படியும் காட்சிபோல் — மாறாதீ
உள்ளபடி யாமளவும் ஈசனுக் கைவிடேல்
உள்ளபடி சொன்னே னுணர். (54)

பரமகுரு தரிசனம்

அஞ்சு விரலாய்க் குதியாய் அகம்புறமாய்
விஞ்சிநக மாய்ச்சிவந்த மெல்லியரா — நெஞ்சா(து)
உலைமீது வெண்ணெய்போல் உள்ளுருக்கும் என்றன்
தலைமீது வைத்தசிவன் தாள். (55)

உச்சியாய் மென்தசையாய் தோடாகித் தோலாய்நாய்
இச்சியா வெண்டலையாய் ஈர்மயிர்பேன் — மொய்ச்சிரா
வாள்வைத்த கண்ணி மணவாளன் மன்றினிடைத்
தாள்வைத்த என்றன் தலை. (56)

ஆக்கநக அங்குலிகள் ஐந்தாய் அகம்புறமாய்
மீக்கொளிறை யாய்ச்சிவந்து மெல்லியரா — நீக்கண்
புரமதனில் வைத்தசிவன் பொய்யறஎன் புன்சிரங்
கரமீதில் வைத்த கரம். (57)

கண்ணாய் இமையாய்க் கருமணியாய்க் கண்மணியின்
உண்ணடு பாவையுமாய் உன்னரிதாம் — கண்ணுதலோன்
ஆட்சிவிடா மும்மலம் அற்றுவிழ உள்ளினோம்
காட்சியற எற்பார்த்த கண். (58)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வழியாய் முதல்நாகி மாறாத் திரும்பித்
தழியாகித் தொல்லைசயும் துன்பு — முழியாமல்
சேகரித்து வந்தமுதல் தின்மலமாம் திண்ணியுப
தேசித்த என்றன் செவி. (59)

வாக்காய் இரண்டிதழாய் வாயாய் எயிறாகி
நாக்காகி அன்னமுடன் அண்ணாவென் — பாக்கியத்தால்
ஈனமாம் சென்மமற எம்முதல்வர் தெற்கிளித்த
ஞானமாம் மோனவசனம். (60)

குருவின் பெருமை

முத்திபெற வந்தவமே போயழியும் மூர்க்கருடன்
எத்தனையும் தீயராகா தென்மனமே — முத்தி
விருப்புற்ற தேசிகன்றன் மேனியின்மேற் சிட்டல்
கருப்புத்தே றற்கிலத்தில் காண். (61)

மந்திரப்பேய் புத்தகப்பேய் வாசகப்பேய் பூசனைப்பேய்
தந்திரப்பேய் பாவகப்பேய் தர்க்கப்பேய் — சிந்தையினின்
றோர்த்தவிர தப்பேய் அனைத்துமொரு வார்த்தையிலே
தீர்த்தவனே மெய்த்தே சிகன். (62)

சீடன் முறைமை

பரமன் *இவனென்றும் பராபரன்தான் என்றும்
அரிய குருவை அறிகிப் — புரைதீர
அல்லும் பகலும் அகலா தவன்முன்பின்
செல்லுமவ னேசீட னாம். (63)

* சிவ — (பா — பே.)

கண்டால் அழல்வீசும் காட்டில் வழிபிழைத்துத்
திண்டாடிக் கோடைத் தெருமந்தார் — முண்டகஞ்சேர்
சீதப் புனலோடை சேர்ந்ததெனச் சேர்ந்தேனுன்
பாதத்தே தேசிகவப் பா. (64)

யாவர்க்கும் இந்திரியம் ஐந்தாம் எழிற்குருவுக்(கு)
ஓவற்ற இந்திரியம் ஓராறும் — மேவியதற்
சீடனுடன் இந்திரியம் ஆறுளதாம் தேசிகனைக்
கூடுகர ணம்போற் றுவி. (65)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கலாசோதனை.

அதிநிலையறிவு மேனிடு மெய்ம்மை
படுகருவி தோறுமிவை பார்த்திட் — டடைவொழியா
அஞ்சுவகைச் சுத்தியறிந் தாங்கவற்றிற் காரியமாம்
பஞ்சகலை விட்டுணேநீ யார். (66)

தீக்ஷா முறைமை.

ஞானமுத லென்றுந் தெளிந்துகய மீனமை
யான பறவை யடுனவகபோ — வூனமிலா
நோக்கி னினைவிற் பரிசத்தி னென் பொருட்க
ளாக்குமவை னந்திருவாம். (67)

மும்மலத்தின் மூலமலம் விஞ்ஞகலர் கன்மமுட
னம்மலமிற் றோர்பிரள யாகலர்கண் — மும்மலமுஞ்
சேர்ந்தார் சகல ரவர்க்குத் திருவுருவா
யோர்ந்தே விழித்துரைப்ப னாற்று. (68)

விஞ்ஞகலர்க் குள்ளே விளக்கொளியாய் நின்றொளிர்வன்
னைஞ்ஞவிவு மாணவகன் மக்கருளாற் — பிஞ்ஞகனே
தெய்விகமாய் வந்தளிப்பன் சேர்ந்தசக லர்க்கவர்போ
லவ்வுருவாய் வந்தளிப்ப னங்கு. (69)

கான வொரு வாணவத்தை மாயைமுதற் கன்மத்தை
மாணகிடு மாய்க்கும் வகைவகுக்கிற் — பாணியின்மீ
னமை பறவையெனப் பார்த்து மகத்துவைத்துந்
தாமலர்க்கை யாற்பரிசித் தும். (70)

தன்னிறைவின் மெய்புகலத் தான்சமைந்து தாபதர்கா
ளென்னுரை செய் தானிறையென் றென்னுரைக்கே — னென்னுடை
யொக்கவுடக் கொண்டிரங் கிருவுடையோர் போவுடுவிற்
புக்கிறைவன் சொன்ன தெல்லாம் பொய். (71)

பருந்துவிடந் தான்கிதிக்கப் பாராதே பார்க்கும்
பருந்திநுக்கே யன்றிவிடம் பாரு — மருந்திட்
டருள்பரனு முள்ளிருந்து மாறுத சென்மங்
குருபரனார் பார்க்கவே போம். (72)

மும்மல தரிசனம்.

மாயை விழிப்படலை மாணவமா மற்றிந்தச்
சேயவுலகந் தெளியாமற் — றீய
இதிவழிகன் மாறியதிற் கொட்புறுதல் கன்ம
மதிவற்ற சோதியறி வாம். (73)

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

ஆணவம்.

ஆணவமே யுன்னை யறியாமை யென்றறிந்தே
னாணவமே யுன்பா லறிவின்மை - காணிலொரு
சற்றுமிலை போதமெனிற் றுமிலை தானறவே
நிற்றலினு னுனகு நீ. (74)

நீயுஞ் சிறிதுபொழுதாணவமாய் நின்றுபா
ராயமன்று மின்றுமாண்டனையே - யோயாம
லெம்புலனு யாடிப்பா ரானந்தத் தாண்டவம்விட்
டெம்பிறவித் துன்பறிய வின்று. (75)

மாலிட் டெனைமறைத்தும் மாறுமவின் றளவு
மேலிட்ட கங்குல் விடியாதோ - நூலிட்ட
வொண்ணுத லீசா வுயிர்க்குயிராய் நின்றவு
நண்ணுத சோதி நவில். (76)

சாதத்தின் வோராய்த் தமோமயமா மூலமலம்
ஆதப்புனலாடப் போமோதான் - போதத்தி
லானசிதா காசத்தா மானந்த வெள்ளத்தே
தானற நின்றுதேறித் தம். (77)

சோராது தெனைவிழுங்கித் தோன்றுத வாணவமே
நேராக நாணைங்கே நீயெங்கே - தீராத
ஆனந் தனக்கடியா முன்னைபோ லென்னைப்பே
ரானந்த மேலிட்ட வன்று (78)

அந்தமிலா வாணவமே யன்றுமுத லின்றளவும்
வந்த அறைவ மறந்தோமே - யெந்தையரு
ளாராத வானந்தத் தந்தத்தே யென்றொன்றும்
வாராத முத்தி வர. (79)

கண்ணாடி *தன்னிரும்பிற் காட்டியதாந் தற்போதங்
கண்ணாக மெய்ப்பொருளை காண நினைந் - தெண்ணிலிநூ
லுன்னிட்ட மாமறையா வாகமத்தா லொண்பொருளைச்
சன்னிட் டிடக்கிமது தான்.

* தன்னிரும்பிற் (பா-பே).

(80)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நற்போதம் வாழ்க்கையிலே நற்பரத்தைக் காணுதற்குச்
சிற்போத மானவர்போற் செய்வதேன் - முற்போத
மம்மரிலே கட்டுண்ட மாசற்ற காட்சிபெறு
மும்மலத்திற் றீண்டாட்ட மோ. (81)

மாயை.

பொய்யா நிலைதனுவாம் பொய்ப்போத மேகரணம்
பொய்யுறவே நிற்ற லதுபுவன - மெய்யாமன்
பாரு மிதமகிதம் வாழ்போக மித்தனையு
மாரு மிதமகித வாழ்வு. (82)

ஐம்பிறைக்குந் தோற்றிடிலே யாசைப் பெருங்கடலைப்
பொய்யுறைப்பின் கேதனத்தைப் போற்றுதே-*மையிருட் -பார்
புல்லாத வானந்த பூரணமே பூரணமா
யெல்லாஞ் சிவமா யிரு. (83)

* மையவிருட் (பா-பே)

பொய்க்குடிலை யைக்கடலைப் பொய்க்கனவைப் பேய்த்தேரை
மொக்குணீர் வீழ்மூத்திரப் பொதியை - மொய்க்குநரிக்
குண்டான நல்விருந்தை யூரும் புழுக்குழுவைத்
தீண்டாடி நீயிதென்ன தே (84)

கன்மம்.

இருவகையா மான்மிகமிக் காயத்தி னைஞ்சின்
வரும்வகைதா னேதுக்கேண் மாணு - பொருவரிய
குன்ம மதிசாரம் வெப்புக் கொடுஞ்சூலை
யன்னபிற வின்னாங்கே ளாய். (85)

மக்களொடு துட்ட மிருகம்பேய் வன்பசுநற்
பக்கிபறிப் போரசுரர் பற்பலவுந் - தொக்கிவுறல்
சோக மசூயை யபிமான மாற்சரிய
மாகுபல வுள்ளநோ யாம். (86)

சீதமுடன் வெம்மை செறிந்து மிகச்சலிக்கும்
வாத மழைதடித்து வானிலிடி - தீதில்
கௌரியொரு பாகன் கருணை யினு லாகும்
பௌதிகமீ தென்றே பகர். (87)

கருவா யுதரத்திற் கண்டுண்டன் மண்ணி
லுருவாகி யுற்பவித்த லோங்க - னரைதிரைதான்
மைவிரவந் நான மரணநர கஞ்சனனந்
தெய்விகமீ தென்றே தெளி. (88)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்பாலே யுண்டான பங்கத்தைப் போக்குவதங்
கப்பாலே யன்றி* யாகாதது போ - லைப்பாலுஞ்
சித்தத்தாற் செய்த செயலா மிருவினையச்
சித்தத்தாற் போகை திடம். (89)

* யரிதது போ (பா-பே)

பேசும் விலங்குபோ லன்றே பெரிதாய
வாசைவிலங் கின்புதுமை யாரறிவார் - தேசமெலா
முட்டா துழலுமே யிட்டான் முறித்ததனை
விட்டா லிருந்தே விடும். (90)

ஆத்மசுரூபம்.

நின்றநிலை பேராமை நீபௌரி கொள்ளுவதா
னின்றநிலை போலே நிமிடத்தி - லொன்றென்றாய்
வந்தாலும் வாராது போனடிப்பன் மன்றுடு
மெந்தாய்க் கரிதே திதில். (91)

காயமெனி லாவியுடன் கண்ணினொளி யென்றுடனே
தூய வெழுத் தவ்வுடனே தோன்றுபொடு - ளாயுமுரை
தன்னுடனே பண்ணேரிசை சார்புடனே யீங்கிவைபோல்
மன்னுடனீ யென்றே மதி (92)

அறியா வறிவன்று மஞ்ஞான மன்றுங்
குறியா லறியுங் குறியிற் - சிறிதுங்
குறையா வறிவன்று கோவறிவு மன்று
நிறையா வறிவுகா ணீ. (93)

எல்லையற வன்னைச் சதசத்தா மென்றவுரை
வல்லபமன் றுண்மை கேண் மாணவக - சொல்லுங்கால்
வேறேது மில்லைகாண் வீடாத வீட்டின்பப்
பேறே சதசத்தாம் பேர். (94)

மாசிலா மொய்யிருளு மாசிலா மெய்யிருளு
மாசிலா தீங்கிவைக ணல்லாய் கேள் - பாசத்
திதுவே யதுவாகு மின்பாதீ தத்து
மதுவே யிதுவா மறி. (95)

ஆத்மதரிசனம்.

எல்லையறு சத்தன் றசத்தன் றிரண்டறவே
புல்லுசத சத்தன்று போதமல - சொல்லதனற்
பேசா நெடுநாட் பிராணுகர வெண்ணியதோ
ரீசான மேகா ணிவன். (96)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஈதல்ல வீதல்ல வென்றென்று சென்றதொடு
போதமது நீயென்று புந்தித்த - போதத்தைச்
சென்றபொரு ளாக்காதே தீர்வு நெகிழாதே
நின்றபடி யே நிறைந்து நில். (97)

எல்லையிடப் பட்டநிலை யெல்லாமு நீகழின்று
செல்லவல்லை யாதலாற் சேதனகேள் - சொல்ல
வரம்பேது மின்றி வளர்கின்ற வின்பா
னிரம்பாத போதன்கா ணீ. (98)

எப்பொருளுந் தானுய வின்பபரி பூரணத்து
னிப்பொருளுக் கில்லை நிலை யென்றுவு - மப்பொருளிற்
றற்காண்ட லின்றென்றெய் *தண்டலற்ற தற்பரத்தி
னிற்காண்ட †லேதெல்லா நீ. (99)

* தண்டற்ற (பா-பே); † லற்றதெலா (பா-பே)

நீயற்று னின்னெழிவு தன்னிலெழு நேயத்திற்
போயற்று யாகினுநீ போகாய்கா - ணேயமற
வெல்லாமாய் நின்றசிவ மின்பபரி பூரணமாய்
நில்லாமை னைசதன் னியம். (100)

தான் சென்றன் மேல்வளருஞ் சச்சிதா னந்தத்தி
னன் சென்று லம்முதற்கு நாசமில்லை - யான்சென்று
புல்லென்று னில்லாத போதானந் தத்தொன்று
மில்லென்றற் றனே யிலன். (101)

என்குறைத றன்பெருக்கா வெல்லையிலாத் தன்பெருக்கே
யென்குறைத றுறு யிரண்டற்று - லென்குறைத
லெல்லை யிலை *தன்னிறைவு மெல்லையிலை யானுன
வெல்லையில யெல்லாமும் யான் (102)

* தன்னிலே (பா-பே)

சென்றதல வந்ததல் இத்துமல சிற்பரத்தே
நின்றதல வின்பமல நேயமல - வொன்றுமுந்
தெள்ளவரிய விவனைச் சிவமுதலுக்
குள்ளபடி யென்றே யுணர். (103)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏதல்ல வீதல்ல வென்றென்று சென்றதொரு
போதமது நீயென்று புந்தித்த - போதத்தைச்
சென்றபொரு ளாக்காதே தீர்வு நெகிழாதே
நின்றபடி யே நிறைந்து நில். (97)

எல்லையிடப் பட்ட நிலை யெல்லாமு நீகடின்று
செல்லவல்லை யாதலாற் சேதனகேள் - சொல்ல
வரம்பேது மின்றி வளர்கின்ற வென்பா
ணிரம்பாத போதன்கா ணீ. (98)

எப்பொருளுந் தானுய வின்பபரி பூரணத்து
ளிப்பொருளுக் கில்லை நிலை யென்றுவு - மப்பொருளிற்
றற்காண்ட லின்றென்றெய் *தண்டலற்ற தற்பரத்தி
னிற்காண்ட †லேதெல்லா நீ. (99)

* தண்டற்ற (பா-பே); † லற்றதெலா (பா-பே)

நீயற்று னின்னெறிவு தன்னிலெழு நேயத்திற்
போயற்று யாகினுநீ போகாய்கா - ணேயமற
வெல்லாமாய் நின்றறிவ மின்பபரி பூரணமாய்
நில்லாமை யைதன் னியம். (100)

நான் சென்றுன் மேல்வளருஞ் சச்சிதா னந்தத்தி
னுன்சென்று லம்முதற்கு நாசமில்லை - யான்சென்று
புல்லென்று னில்லாத போதானந் தத்தொன்று
மில்லென்றற் றனே யிலன். (101)

என்குறைத றன்பெருக்கா வெல்லையிலாத் தன்பெருக்கே
யென்குறைத றுறை யிரண்டற்று - லென்குறைத
லெல்லை யிலை *தன்னிறைவு மெல்லையிலை யானுன
வெல்லையில யெல்லாமும் யான் (102)

* தன்னிலே (பா-பே)

சென்றதல வந்ததல சித்துமல சிற்பரத்தே
நின்றதல வின்பமல நேயமல - வொன்றுமுந்
தெள்ளவரிய விவனைச் சிவமுதலுக்
குள்ளபடி யென்றே யுணர். (103)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

* அத்துவித நன்றருளி லத்துவித நன்றின்ப
வத்துவித நன்றருளி லன்றுகி - முத்தியினி
லண்மைபிரி வற்றவன்று ஞானந்தத் தற்சிவத்தி
லுண்மையிவ னென்றே யுணர். (104)

* அத்துவிதன் றன்னருளி (பா-பே)

சார்வறிவு போதஞ் சதசத்து சிற்றறிவு
பேரறிவென் றின்றிவனைப் பேசாதே - தீர
விவன் செய்தி யொன்றுமில்ல யீங்கிவனை யெண்ணிற்
சிவன் செய்தி யென்றே தெளி. (105)

வாரா யறிவுடைய மாறு வனக்குரிய
பேராம் வகைபலவும் பேசினே - நேரா
அவமை யெலாம் * பொய்யுற் றெழிந்தவிடத் துன்னச்
சிவமய மென் றுள்ளே தெளி. (106)

* ஐய்யுற் - (பா-பே)

ஆளன் றவனன் றிவனன் றறிவன்று
தாளொன்றி நின்றுணருஞ் சத்தன்று - மாளாத
சிற்சொரூபி யன்று சிவானுபவி யன்றளவி
றற்சிவ முன்ன டாதலிவன் றன். (107)

செல்லாமற் சென்றவிடஞ் சிவபரம் போனவிட
மெல்லா மழிய விருந்தவிட - நில்லாமை
நின்றவிட நின்று நில்லாமை நின்றபொரு
ளொன்றுயிர் நின்ற விடம். (108)

ஈட்டமில் பொய்ப் போதமற விந்திரியத் தோறுமமை
தூட்டினவன் மீட்டே யுறுதுணையாய்க் - கூட்டறவே
யொன்று சட சாலமெலாம் வேறுக்கி யொன்றுமற
நின்ற பொருள் சைதன் னியம். (109)

* ஒன்று மிலா வொன்றேயுன் றுண்மையினை நீயிழந்த்
டொன்று மிலா வொன்று யுடனுயே - வொன்றுகே
நின்னுரைக்கி னின்னுரிமை நீயுணராக் கேடதனை
யென்னுரைக்கே னையோகேட் டேன். (110)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரையழிய வாழும் பரனுயிர்நீ யென்றிட்
டுரையழிய மோன முரைத்தோம் - பரையழிய
வானமுதற் கத்துவித மாக்காதே யவ்வயினீ
போனநிலை மாறுமற் போ. (111)

முன்னமல மோகத்தே மூண்டெடுபொய்ப் போதத்தை
யுன்னறிவென் றிந்நாளு மின்றேயே - நின்னிலகே
ணீயறியப் பட்டதெலா நீயல்ல வென்றுனது
நேயமுத னீயாகி நில். (112)

ஏதுநீயா யேதுனதா யேதருந்தி னையென்னே
யேதுநீ யென்றேயிப் பாடுபட்டா - யீது
மதுபான போதங்காண் மற்றிதனைக் கண்ட
வதுகாணுன் சத்தியபோ தம். (113)

செல்லாதே நில்லாதே சேராதே சாராதே
சொல்லாதே புல்லாதே சுட்டாதே - யெல்லாமு
மாகாதே யானந்தா தீதவகண் டிதமு
நீகாண துவே நிலை. (114)

ஆத்மசுத்தி.

வெய்யோ னனைந்தவிழி வேறற்ற காட்சியல்லா
வெய்யோன் றெழிலவிழி மேவிற்றே - வைய
னடுளாயிவன் பெற்றவு மைந்தொழிவுண் டாகா
வரியன் சிவத்தோடுற. (115)

சுட்டற்ற காட்சியினு லன்றிச் சொரூபத்தைக்
கிட்டக் கிடையாது கேட்டியே - வெட்டனவே
விண்ணிற் கதிரவன்பால் வேறற்ற காட்சியல்லாற்
கண்ணுக்கு முண்டோ கருத்து. (116)

வேறாய விந்திரியம் வேறற்ற நல்லறிவாய்க்
கூறாய வின்பதனிற் கூடியபி - னீறி
லடிமையிவ னாகாம லானந்த மாவ
னடிமையெலா நாயகனே யாம். (117)

முத்திக் கனியிருக்க முன்னுரைத்த நான்மொழியாற்
பித்துப் பெருகப் பிதற்றுதே - சித்தமலம்
பேய்போ லகன்றெழியப் பேறற்ற பேறென
நீபோன வின்பத்தே நில். (118)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நின்றநிலையே நிலையாக வைத்தொருவன்
சென்றபொருள் சேர்ந்தபொருள் செல்பொருள்க
- ளொன்றுமற
வொன்றாகி யேயந்த வொன்றற்ற வொன்றதனி
லின்றாக வைத்தா னெனை. (119)

கண்ட வடிவு சடமே யெனிலதமங்
கண்டழித்துக் காணுமை காணுமது - கொண்டுணரின்
மத்திமமே யந்த வகுப்பொன்றுங் காணாத
துத்தமமா மென்றே யுணர். (120)

சீலமழிந் தொன்றிய சிற்சுகபோ தங்கடின்று
மேலொடுக்கீ டற்றசிவ வேதகத்தை - நூல்பலவாற்
பல்சொல்லா னீடளவைப் பண்பினாற் காட்டவுலர்
புல்லாற்றீச் சுட்டல்போ லும். (121)

மூவலியு மற்றவருண் முத்தாவோர் சத்தியங்கே
ளோவலியா முண்மைப்பே ரின்பமெல்லாஞ் - சீவிதனிற்
சீவியே சீவியெனச் சீவபர மற்றதுவே
பாவியா முத்திப் பயன். (122)

நாலாய நற்பதமு நல்ல வவுத்திரியு
மாலாய தந்திரமு மந்திரமு - மேலாய
சிற்போத வுண்மைத் தெரிசனமு மெல்லாமுன்
றற்போத நட்டமழித்தான். (123)

நீசிவமாய் நின்றபடி நின்றிடவே நீயற்ற
நீசிவமா யெங்கு நிறைந்திடுவை - பாசவிருட்
கேட்டிலே யெப் போதுங் கேடுபடா தானந்த
வீட்டிலே நின்று விடு. (124)

வெண்ணையுரு பாவையென மெய்யுருக வானந்தக்
கண்ணருவி சோரவுரை கைகழல - வெண்ணமெலா
மற்றசிவ பேரின்ப வானந்த பூரணத்தே
யுற்றசுவ டொன்றுமே லொன்று. (125)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாதனிரு பாதத் திருபரவை நாடோறும்
வேத நுவல் பரவை மெய்ப்பொருட் பாற் - போதமற
நின்றிலகும் பரவை நீள் பிறப்பி லுன்றனுயி
ரொன்றுமைக் கோர் பரவை யோர். (126)

சிவானுமலசிகசம்.

ஆதியமல னணுமலவ னுயிருக்கு
நீதி இருவே நிகழ்த்தனைக்கிங் - கோதுங்காற்
றர்க்கமற வாதி யணுவுக்குந் தானிரண்டு
நற்கனகஞ் செம்பெனவே நாடு. (127)

ஞான முறைமை.

ஆயாம லெம்புனல் சேர்வாயி லொடியெறிந்தங்
காயா மனத்தை யலைவறுத்து - மாயாதே
பண்டை யறிவொழிந்து பண்டையறிவாய்ப் பரத்தை
மொண்ட ழுந்திப் போவதுமுத்தி. (128)

கருவிகொடு காணிவது காணய் புலையை
மருவி மறையவன்பால் வந்தா - லுருகலைய
வொட்டுவனே வேறே யொருவனைருத்தியுறிற்
கிட்டுவரோ மற்றொருவர் கேள். (129)

ஆடுஇலா லன்றிகிரி யோர்சுற்றுக் காயிரஞ்சுற்
றேடுங் கரணத் துடிலாதே - நீடறிவி
லைட்டயிலும் போனின்ற வெந்தையுடன் முந்தாத
நிட்டை யிலே நில்லாமனில். (130)

மேவு புறக்கரண முட்கரண மென்மேலுந்
தாவியொடு சற்றுமதிற் றக்காதே - யோவாத
நாதமுடிவான நற்பரத்தோ டுற்றவநு
பூதியை நா மென்றுகாண் போம். (131)

பரை தரிசனம்.

மன்னு பரைக் காட்சி யேதென்ற மாணுகே
ஞான்னுடனே யொன்றி யுணர்வாகி - யிந்தைநோட்
காணவரிதாகி* மனக் காரிருளை யேவளர்க்கு
மாணவத்தைக் காணுமதே யாம். (132)

* மடைக் காரிருளை (பா-பே)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சத்திகிடைநவி.

நன்று மிரு வெங்கலப்பி னமிழ்ந்த நற்சுகம்போ
லென்றுமுமை தன்கலப்பி னின்பாமோ — வொன்றி
* யுருகிச் சுகிக்குமுமை யாமாகி யுன்னைத்
தருகைக் கிசைந்திடுமோ தான். (133)

* யுருகச் சுகியுமையே (பா - பே)

ஐவகையாஞ் சத்தியைவிட் டானந்தத் தெய்துநிலை
தெய்வநெறித் தேசிகனே செப்பெனக்கு — தையலமுன்
பாங்கியர்க ணாயகனே டாக்கிப் பணியறவே
நீங்குமது போதலே நினை. (134)

படுசுத்தியில்லாமை.

எப்பொருளு மாளு லிவன்படுதல் சுத்தி செய்தல்
செப்பரிய சற்குருவே செப்பெனக்கு — மெய்ப்பொருட்பா
லுற்சுத்தி யென்றே மொழிந்திடுவ தீதன்றுந்
தற்சுத்தி நன்னே தயம். (135)

போத ஒழிவு.

பொய்விளக்கு மின்பபரி பூரணத்தே நின்றெளிரு
மெய்விளக்குச் செய்யும் விதிவிரிக்கி — லையமற
வொன்றெருவன் றாண்டி லொளிவீசு மற்றுரைத்த
வொன்றெருவன் றாண்டிலவியும். (136)

ஏக்க வுயிர்க் குயிரா யோங்குசிவ முள்ளிருக்கப்
பொக்கினைர் வினலே புறந்தேடல் — சர்க்கரைதே
னுண்டான பாற்றிரளை யுட்கையிருக் கப்புறங்கை
கொண்டாடி நக்குவதொக் கும். (137)

அடிமை வியப்பு.

நின்மலனீ யுன்மலனு னின்னிலடி யேன்மிகவு
நன்மையுடை யேனிதனை நாடிக்கேள் — சின்மயனே
யுன்கெடு பாச- விடுளாகு மொன்றுமிலா
வென்கேடா னந்தமா மே. (138)

கதியிரத்தல்.

மாசுமனி பொய்ப்போத மாண்டருளே யெங்குமிக
வீசியது வாய்ந்திறைந்து வீடாதே — தேசிகனை
யென்போல் வந்தகுரு வென்குருவே யென்குருவே
யென்போல வந்தகுருவே. (139).

ஆகார மேவிளவித் தாருயிரா யின்றளவும்
போகாத பொய்ப்போதம் போயகல — நீகாதான்
தாடா குருநாதா தாடா குருநாதா
தாடா குருநாதா தான். (140).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எய்ப்பதனின் வந்துதவு மின்பத்தா னிவைத்த
வைப்பொழிய வென்றலைமேல் வையாயோ - மெய்ப்பொருட்பா
னில்லா நிலையளித்த நின்மலனே நீவகுத்த
தெல்லாமும் பொய்யா யிட. (141)

செய்ததெல்லா நீயாகிற் சிந்திப்ப தெப்பொருளென்
செய்ததெல்லா நீயான சின்மயனே - செய்ததெல்லா
நீயா யிரண்டற்ற நின்னிறைவை யென்னுயிர்க்குத்
தாயான தேசிகனே தா. (142)

ஆகார நித்திரைகா மாதிக்கு* மூலமுதல்
நீகா ணெனதறிவாய் நின்றவனே - யோகாதி
சிந்தனையு நிட்டைகளுஞ் சித்தமல மாக்கியுனைத்
தந்தருளா யென்குருநா தா. (143)

* மூலதலம் (பா-பே)

பார்த்ததே கத்தின்மலப் பாவனையாம் போதத்தாற்
கேட்கும் போந் துன்னைக் கெடுத்தேனே - காட்சியுறு
தெல்லா மழித்தெனக்கு னின்பபரி பூரணத்தைச்
சொல்வாய் நான் கேளாமற் சொல். (144)

ஏதப்புக் குன்னைப்புக் கொன்றைப்புக் குன்னிழந்த
போதத்தை யானென்ற பொய்கெடவுன் - பாதத்தைச்
சாராமற் சார்வறிவு தட்டாம னின்றநிலை
வாராமல் வாராய் வர. (145)

ஒன்றுமற நீயிருந்த வுண்மையென துண்மையதா
லொன்றுமற நீயிருக்க வொண்ணாதோ - வொன்றுமற
நீயிருக்க வொண்ணாத நின்செயப்பா டின்றெனக்குத்
தீயிருக்குங் கண்ணுடையாய் செப்பு. (146)

நீயெடுத்த கோலமெலா நீயல்ல வென்றிருந்தே
னீயெடுத்த கோல நினையாக்கி - நேயத்
தனுபூதிக் கப்பாலா மானந்தா தீதத்
தனுவே தனுவாகத் தான். (147)

உன்னருளைத் தந்தெனை நீ யொன்றிடினு மென்போத
மென்னை மிகப் பண்ணுமிதற் கென்செய்கே - னின்னருளோ
டென்போத மோவலிய தேதென் றெனக்கிசைய
வையென் [illegible] வந்தா யிசை. (148)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாயா வுருநிகர்ப்ப மானிடம்போல் வந்தெனக்குத்
*தாயாவி நீயென்ற சற்குருவே - நாயே
னறிந்ததெல்லா நீயா யறிவானேன் கேணீ
யறிந்தவனு நீயாகை யால். (149)

* தாவாவி (பா-பே)

தானுந் தனிமுதலென் றெற்காண நிற்காண
யானுந் தனிமுதலென் றென்னுயிரே - யினமற
நம்மினு நம்மை *யறியும்வகை நல்காயே
லெம்மிலே யுள்ள திருள் (150)

* யறியுநெறி (பா-பே)

யானுந்தா னுந்தான் பொய் யானேதான் றனேநான்
யானுந் தனிமுதலன் றென்போலத் - தானுந்
தனிமுதலன் றென்னுழியத் தன்னுணே தப்பா
தினியெதற்கு நோல்கற்றேன் யான். (151)

சத்திசிவத்துண்மை.

தற்பரமுன் னிற்கத் தடுமாறி யின்றளவும்
பற்றறிவு தற்றெழிலாய்ப் பார்த்தேனே - சிற்பரமாய்
பொங்குஞ் சிவானந்த பூரணத்துள் வைத்ததற்பி
னெங்குஞ் சிவமாய யான். (152)

வீடொழியப் பேறில்லை யென்றென்றும் வேதங்க
ளுடியறை யும்பொருளை ஞானகுரு - நீடுமருட்
கண்ணாலே சொன்ன கருணைப் பிரான்றனைநா
னெண்ணாதே யுண்டிருப்ப தென். (153)

கூரிருள் நீங்காமற் கோமானு மெய்தாதுன்
பேரருளைத் தந்தாய்க்கென் பேசுகேன் - சீரொளி சேர்
வெங்குருவா டண்ணலே வின்னவிலா மெய்ஞ்ஞானந்
தங்குருவா மெங்குருநா தா. (154)

நீடு சிவன்பிரம சாரியென நின்மிலவு
*நாடரிய கன்னியென நாட்டுமறை - நேடுங்காற்
குன்றதை யின்பக் குருமணி பாற் சென்றுழுந்தி
யொன்றுனர்க் கீது விளங் கும். (155)

* நாடறியக் (பா-பே)

அங்கமுதல் வந்தெறி யாவையும்விட் டானந்தத்
தங்கு சிவ போதவருட் டாபதர்க - ளெங்குஞ்
செறிவின்றி யில்லானைத் தேசிகனு லன்றி
யறிவென்ற பேறிவா ரார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்னைப் பணியவுய்த்திட் டென்னைழிவு தன்னிலே
தன்னைத் தரவல்ல தம்பிரான் - றன்னைப்
பெறுதியிலே பேறறவென் பேறற்ற பேறு
மறுதியிலே யெங்குமா னேன். (157)

கையாகிக் காலாகிக் கண்ணா யெயிருகி
மெய்யாகி நீயிருந்தான் மெய்யாமோ - வையாகோ
வித்தனநா னிப்பொதியை யெப்படியே நீபொறுத்தா
யித்தனையு மாற்றேனி யான். (158)

எல்லாநூல் கற்றிடும் யாவு முணர்கினுமென்
பொல்லா நினைவொருநாட் போகாதோ - சொல்லொழியப்
பார்த்தவனே பங்கயப்பொற் பாதமென துச்சியின்மேற்
சேர்த்தவனே தேசிகவேந் தே. (159)

மையலிலா வாணவஞ்செய் வாதனையால் வந்தடுத்த
பொய்யறிவை நானென்று போந்தேனே - மெய்யருள்சேர்
* சிற்பரம தேசிகனே தீவினையே றய்த்தலைமே
னற்பாதந் தாராத நாள். (160)

* சிற்பாவ (பா-பே)

கண்டுருகிக் கைதொழுதேன் காதல்விடாய் தீரவுன
மொண்டுகொளப் போத முயன்றிலுந் - தொண்டிற்
றனிமுதலா முண்மையினிற் றனைழிய நாயேன்
றனிமுதலே சற்குருநா தா. (161)

துன்பமயக் காகியபொய்த் தூட்டபந்த நோயதனை
யின்பமெனக் கொண்டிங் கிடந்தேனே - யன்பிலெழுந்
தோவாத மெய்யுணர்வா யுள்ளே நின் றுள்ளுருக்கிந்
தாவாவா னந்தந் தனை. (162)

உணர்த்து முறைமை

வில்லார் மணிச்சிலம்பில் வேறுபல வானவைவாட்
கல்லாய் மயக்கியிடுங் காலையினி - லெல்லாம
மறைப்பொருளாள் மாமணியிற் கொண்டல்போன் - மூன்று
முறைப்பதிறை யுண்டிங் குயிர். (163)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காட்டங் கிடைந்தகனல் காச முரித்தவிழி
தோட்டும் *புடவியினிற் றேன்றுபுனல் - கூட்டங்
+கனங்கழித்த பொன்னிவையோற் காட்டுங்குவி
யினங்கழித்தா னிற்பெறலா மெண். (164)

* புவியதனிற் (பா-பே) + கனல்விழித்த (பா-பே)

உற்பவித்த வுண்டாத லோங்கன் மிகவளர்தல்
மிற்குறைத லீதலெனப் பேசியிடு - தற்குணங்க
ளாறு முடற்குணங்க ளென்றகற்றி யோதியவிவ்
வாறுமுனக் கின்றென் றறி. (165)

ஊணுறக்க முட்குபத்த நோயுரைத்த லோசையுறல்
காணல் சுவை நாற்றங் கற்பனைக - ணுணகந்தை
நில்லாத கோபம்பொய் மெய்சாந்தி நீமுதலா
யெல்லாம் பகுதியோ டே. (166)

வார்த்தையற வோர்வார்த்தை கேட்டியேன் மாணநிற்
பார்த்தொழியெப் போதுமுனைப் பண்ணுதே - யார்த்த
கட்டழியா யாகி ஞல[redacted]ண்டாகிக் குவிதொறும் -சடக்
பட்டதெல்லா மோரோர் பவம். (167)

வாணையப்புண் ணுக்காதே மாணநீ யுள்ளளவு
நேயத்தே நிற்கவே நீகேளாய் - மாயா
வுருவத்தே கட்டுண்ட வன்போதம் போன
பருவத்தே மேலிடுமின் பம். (168)

எல்லாமிறந்தவிட மேக்காந்த மானவிடம்
புல்லாத பேரின்பம் போனவிட - மெல்லையறச்
சொன்னவிட *மேலிவைக ளெல்லாந் துறந்தவிட
மென்னறிவு +நிற்கைக் கிடம். (169)

* மேதவைக (பா-பே) + நின்ற (பா-பே)

தன்முதலிற் றேசுளிற் றன்னிறைவை யெப்போதும்
பன்முறையாய் நின்று பகுத்துணர்ந்த - நின்மலகேண்
மெய்ப்போத நாடாமல் வீணிலே நான்கண்ட
பொய்ப்போத மேதாகிப் போம். (170)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏதுதரு மெண்ணி லிவனன் றிவனருளன்
றுதிபரை யின்பமிறை யன்றுகு - மோதியிடிற்
சிற்பாவ மாணவன் சென்மக் கிழுங்காய
தீற்பாவ நட்டந் தரும். (171)

பெத்தமுத்தி யுண்டென்று மிக்கோர் ☆ பிரித்துரைப்ப
ரத்தகைமை மித்தைதரு மாய்ந்துணரிற் - சுத்த
மருட் போதர்க் கில்லை மலைவில்லா வுண்மை
யருட் போதர்க் கில்லை யருள். (172)

☆ விரித்துரைப்ப.

உன்னை யழித்தெழுந்த வுண்மைக்கு நீயார்மற்
றன்னியமி லுண்மை யதற்கதுவா - றென்னுநிலை
தீரத் தெளிந்து சிவமுத்தி முற்றவிளைந்
தாரைப் பொருளென் றறி. (173)

தன்னிற் றனியருளாற் சங்கரனைப் பெற்றவ
முன்னிலுனை யொன்றவொணா தூற்றுக்கே - நன்னயு
காலங்க ளெட்டாத கள்வனையு மெண்ணிலிரு -நற்
காலம் போ லுன்னிலே காண். (174)

கட்டறுமா னந்தக் கரைபுரண்டு மென்மேலு
மட்டறவே நிட்டைவர மாய்ந்துவிடுஞ் - சிட்டாய
தெய்வச் சிவானந்தச் சின்மயமா முண்மையிலே
யையவர்க்குச் சாதவிடும் பை (175)

தீங்போ லடைந்ததெல்லாஞ் சின்மயத்தே தாளாக
மாய்ப்போர்க்கு வாய்மை வகுத்துரைக்கேன் - பேய்ப்பேது
பொய்யிலெழு மொன்றிரண்டு பொய்யாஞ் சிவனறிய
மையலிலா *மெய்யிரண்டன் மை. (176)

* மெய்யிரண்டின் (பா-பே)

உன்றன்மை யென்றன்மை யோதக்கேண் மாணவகா
வொன்றென்று முற்பிற்பா டோதரிதா - நின்றன்மை
சின்மயமே யாமளவிற் றீரமுன்ன மிங்கிதுபோ
னின்மலனு மாவதன்முன் னீ. (177)

கெட்டவரு ளாணவமுங் *கெட்டுப் பரனறிய
நிட்டையுமுன் பால்வந்து நேர்வதிலை - சுட்டறிவு
துஞ்சல் பிறப்புநிலை யற்ற சுகா தீதத்திற்
+கிஞ்சனுநீ யுண்டா கிலும் (178)

* [illegible]

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஞான சதுட் பாதம்

தன்னுலகு தன்னருகு தன்னைப்போற் றன்னுள்ளே
யென்னுமிகு முத்திபெறற் கேதுவா - மன்னு
சரியை கிரியை யாயோகஞ் சன்மார்க்க ஞானந்
தருநிலையி னின்றோர் தமக்கு. (179)

தற்கேள்வி நற்சரியை தன்னுண்மை சிந்தித்தல்
பிற்கிரியை தற்றெளிதல் பேசுங்கா - லுற்றசிவ
யோகமா நிட்டையுறன் ஞானமா முண்மையரு
ளாகமாய் நின்றே யறி. (180)

ஞானசதுட் பாதப்பேறு.

ஞானந் திகழ்ந்தறிவை நாடுவதே சாலோகந்
தானும் பறையாதல் சாமீப - மானந்த
போதமே யாகுமது சாரூபம் போதசுகா
தீதமே சாயுச் சியம். (181)

மனப்பற் றொழிதல்.

வாராய் மனமேயோ ருண்மைகேள் மன்றுடையான்
காரார் கறைமிடற்றன் காபாலி - யாராத
வாசை யறுவையன் றேடுவா னகத்தோ
டாசை யறு~~—~~வையா னல். (182)

உன்னுமனந் துஞ்சிடவே யோரைந்துந் துஞ்சிடுங் காண்
மன்னுசிர மோரைந்தும் வாட்டமுறத் - துன்னுகளஞ்
சேதிப்ப மாயுஞ் சினவரவை மானுங்காண்
மீதற்ற மானு தெளி. (183)

*ஆவிதனக் கண்டம் +பகையான வாறுபோற்
பாவிமனச் சுட்டாகிப் பட்டேனே - பாவனையின்
மன்னுனை யென்னுழிவில் வாழ்வானை வாழ்விறந்த
வென்னுனை யிந்நா ளிழந்து. (184)

* நாவிதனக் (பா-பே) + பகையானாற் போன்மனம் (பா-பே)

உற்றோர்போ னின்றே யுசாவியுயிர் கொள்ளுமனப்
பற்றினை விட்டேனை நான் பற்றேனே - சுற்றுத
வம்பரா மெய்ஞ்ஞான வம்பரா வானந்த
வம்பரா போதமுதல் வா (185)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இன்பத்துக் கோடி யிளைக்குமது போன்மனமே
துன்பத்துக் கோடிச் சுழலாயே — யான்பழுநீ
யப்படியென் றெண்ணியிளைப் *பாறியருட் பேறுபெறு
திப்படிவந் துற்பவிப்ப தேன் (186)

* பாறியாட் (பா—பே)

ஊணு*முறையுநமன் றூதுவர்கா ணுள்ளமே
வாணுதலார் நேரே மறலிகாண் — பேணியிவ
ருற்றார்போல் வந்திடுவர் வந்தாலு மோட்டியற
னற்று மறைப்பதமே நாடு. (187)

* முடை (பா—பே)

எதுக்கு நீசமையா யெந்தவுடக் கொண்டெலா
யேதுக்கு நீபொருந்தா யென்மனமே — பேதைப்
பருவம்போ யுள்ளபடி பார்க்கும்போ துன்ற
னுருவங்காட் டாதே யொழி. (188)

காணு நிலை பலவுங் காட்டினே மாங்கவற்றிற்
பூணுது மாயைப் புலன்வழிபோ — மாணு
வினைந் சொல்லக் கேளாய்நீ யெப்போது முன்றன்
மனந்சொன்ன தெல்லா மறு. (189)

மானதமே தான்முதலாய் வாழ்கின்ற வந்தேறி
யானதெலா நின்னுழிய வாகாதால் — யானென்னும்
பேயென்ற போதே பெருகும் பெருக்கமெலா
நீயென்ற போதே நில. (190)

சித்தவிகற்ப மது தீராது தீர்ந்தன்றி
முத்தி பெறு வோமென்னு மூர்க்கருரை — கத்தலைதா
னற்றிருந்த போதுகட லாடுவோ மென்றெண்ணி
யுற்றிருந்த பேதை போலும். (191)

திரையிலா நீர்போலச் சித்தை நிலாதாயி
*னுரையிலே பேரின்ப முண்டோ — விரியிருள்வாய்
நில்லா விளக்கை விளக்கென்று நீயுரைத்த
சொல்லா லிருள்போன தோ.

★ னுரையிலாப் (பா—பே) (192)

— ஆகசெய்யுள் 192. திரட்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(மௌனநெடுநூல்)

* ஏதுளதென் றெண்ணி யிருமாந்தா யின்றளவு
மேதருந்தி நீயவமே யின்புற்று - யேதுநீ
கண்டுகளித் துண்மகிழ்ந்தாய் நெஞ்சமே கண்ணுதலோன்
முண்டகத்தா டாராத முன். (193)

* ஏதுனதென் (பா-பே)

உன்மத்தங் கொண்டே யுலகியற்கை நாடுதலா
லென்மத்தம் போதங்கொண் டேதுவினைற் - கன்மத்
தொலைவிலே தோன்றியிரு[illegible]ந் சோதியையுன் போத
மலைவிலே காணுமையல். (194)

ஓரிக்கு நாய்க்குங் கழுகுக்கு மீன்சுமந்து
* பாரிற் கிலேசப் படுகின்றீர் - சார்வுகெட
வொன்றிடூ நுண்மையினி லொன்றுக்கொ னின்மையிலே
நின்றிடீர் நில்லா நிலை. (195)

* பாரக் (பா-பே)

பொய்யறிவு சிற்றறிவு போதம் பெருக்கறிவு
மெய்யறிவு வேறாய் விழித்துணர்ந்தங் - கையறிவு
மோரறிவே யாகவரி துண்மைபெற † லாமுளமே
யோரறிவு மாகா தொழி (196)

† லாமனமே (பா-பே)

நின்னறிவு போனின்ற நிட்டூர போதத்தை
யென்னறிவென் றின்றளவு மெய்த்தாயே - புன்னெறியா
மிவ்வறிவே யாகிற் பிறந்திறவா தென்செய்வா
யவ்வறிவி னீயிலையா னல். (197)

மேவு படிக வரையிற்றன் மெய்ந்நிழலைத்
தாவியொரு நாயாகத் தானெண்ணி - யோவாதே
கத்தித் தலைவெடிக்குங் காட்சிபோற் கத்துவரோ
இத்தத்தை விட்டார் செயல். (198)

வானாதின் போதத்தான் மாணு கருவிகழித்
தானாய தற்காட்சி யாமென்னிற் - கோளாய்
குருட்டரிப்பன் மண்ணை யெல்லாங் கூறுசெய்து -பொன்னை
யரித்தெடுப்ப னுமாகி லாம். (199)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துறவு.

உன்ன *வுரையியற்றல் பார்த்திடுத லொத்தவளம்
பன்ன விராசியங்கள் பண்ணிடுதல் - +நன்னுதலை
யுற்றிடவே இந்தித்த வூட்டுண்ணிதல் கூடுதலைட்
டற்றவனே பற்றற்ற வன். (200)

* வுரைவியத்தல் (பா-பே) + மன்னுதலை (பா-பே)

காயாதி கக்கினசோ றென்னவே காட்சிவரு
மோயாத நற்பே யொழிந்துவிடு - மாயையெனுஞ்
சார்வுவரிற் கட்செவிவாய் மண்டூகத் தன்மைவருஞ்
சார்வுகெட நின்றோர்தமக்கு. (201)

மேனிபுள கிக்கும் வியர்க்குமே வேட்கையொழிந்
தானமற வாடகமோ டொப்பாகுந் - தானற்றோற்
குள்ள மலைவொழிய மோவாத வானந்த
வெள்ள மலையும் விழி. (202)

உடம்பு மனைவிமக வற்றோர் *நீங்கே
யடைந்ததனம் வீடடிமை காணி - தொடர்ந்தவினை
யென்னவெனுஞ் சொன்னினைவும் போன +விறையடுளோ
னன்னியவ னைப்பெருமான் மா. (203)

* நீர்கே (பா-பே) + விறையருளான் (பா-பே)

தாவா மனவேகஞ் சொற்றுரைவேக
நாவாரும் வேக *நடைவேக - மோவாத
குட்பதத்த வேகமெனச் சொல்வேகமித்தனையும்
விட்டகற்றி னலன்றோ வீடு. (204)

* நடுவேக (பா-பே)

தந்தைதமர் தாயருடன் பிறந்தார் தாரமெனும்
பந்தமிகு மைந்தரொடு பல்கிளையுஞ் - சிந்தைசெயி
னுடகஞ்செய் பேரவையு நாளில்மேற் சந்தையுமாற்
றேடமுமென் றுள்ளே யுணர். (205)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாசம் பகையாகக் கண்டார்க்குப் பாசத்தி
னேசந்தான் மென்னை நிலையாது - பாசத்தை
வெட்டிலர் காணுதலின்றன் மெய்ஞ்ஞான முத்தியினுந்
தொட்டிலர் காண் கற்றனர்காண் சொல். (206)

ஏதே துணர்ந்தாலு மேதே துரைத்தாலு
மேதேது செய்தாலு மென்னுகு - மேதேது
மில்லாத வுண்மையர்பா லெல்லாஞ் சிவமாத
லல்லா லுளதோ வழி. (207)

சென்ற நினைவாலு மினிச் செல்லு நினைவாலு
மொன்றுமுனக் கில்லைபய னோதக்கேள் - நின்றவிக்கு
சிற்றறிவை நீக்கியருட் சின்மயத்தே பற்றுமற்
பற்றுவதே யுற்ற பயன். (208)

சீவன் முத்தி

நின்னறிதல் யானென்ப தற்று நீ யற்றவுணர்
வென்னறிவென் றன்னை யிழந்தேனே - யென்னறிவில்
வாழ்முதலே யானழிய வாழாத வல்லபனே
சூழ்முதலே யெங்குநிறைந் தோய். (209)

என்னை மறந்தடியேன் யானல்லா யானுகி
யந்நெடு நாட் பொய்யி*னீத்தேனே - யென்னறிவிற்
போதா வகண்ட பரி பூரணனே +போக்களிக்கும்
பாதாவா னந்த டீப. (210)

* விடைத்தேனே (பா-வே) + போக்கழிக்கும் (பா-வே)

பொய்ப் போதந் தாக்காத போதமெனக் கெப்போதும்
வைப்பாக நின்றுதிக்கும் வாழ்முதலே - யெப்போது
நீயிருக்க நான் பிறந்த நிட்ரே நீ பொறுத்த
லாயிருத்த லேதோ வருள். (211)

மன்னு கரண வகுப்பொழித்து மாயையெனுந்
தன்னிருளை யோட்டித் துரந்தறிவை - யன்னியஞ்செய்
வேரைக் களைந்தின்பம் வீசியதே தேசிகன்ற
னிருக்கு மெட்டா வருள். (212)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கையறியா விந்திரியக் கள்வரெலா முள்புகுந்தேன்
மெய்யறிவைக் கொள்ளைகொள விட்டேனே - பொய்யறிவின்
புற்போத மேலிடவென் போதத்தி லேபுகுந்து
நிற்பதோ தெய்வமே நீ. (213)

நீயின்மை யெல்லாமு நீயன்மை யாகாம
னியன்மை யாணவமா நீடுவதே - னியன்மை
யென்றநிலை யெல்லாமு மின்பநிறை வாயிருக்க
வின்றளவு மாணவதே யான். (214)

இந்திரசா லங்காட்டு மஞ்சனக்கண் ணேபுகுந்து
முந்தவல கங்காண மூளுவதாங் - சிந்தனையுங்
இற்றறிவு நீக்கியருட் சேரா துபாதிகொடு
தற்பரத்தைத் தேடுமது தான். (215)

மேலாய மெய்ப்பொருட்கு வித்தாகி நானெனுசொன்
தோலாலே பட்டதுயர் சொல்லுங்கால் - வேலைச்
செறித்ததீப் புண்ணுளன் சிந்தையென நொந்து
இறித்தபோ துள்ளநடுங் கும். (216)

எந்தவுருக் கொண்டிலோ மேதே *தருந்திலோ
மெந்தவுரை பேசி யிறந்திலோங் - சிந்தையே
வாய்த்தவருண் மன்றுடையான் மாமலர்த்தாள் வல்வினையே
ஏய்த்தலமே னல்காத நாள். (217)

* தறிந்திலோ (பா-பே)

என்றும் பெறுமுதலா மென்னறிவி லின்பமுத்தி
யொன்றும் பெறுமுதலா முன்னிலைமை - யென்ற
னறிவினறி வின்மயனே யப்படிநீ நின்ற
இறியொன்ற நின்னருளாற் கூறு.

(218)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மெத்தவிழி நீர்ததும்ப மெய்புளகும் விண்டுளள
தித்துருகு நாளொருநாட் கிட்டாதோ - வத்துவித
வாசாம கோசரமே மன்னுயிரே யென்னுயிர்க்கு
நேசாபோ தாகாச னே. (219)

என்னிலையே யுன்னிலையா யின்பதனிற் றுன்பதனி
லுன்னிலையே யென்னிலையா யொன்றேனோ - வென்னு -கடு
டுற்காரி யுண்டுமிந்த *வுள்ளளவு மோவாதோ
சற்காரி ஞானனந்தா. (220)

* வுன்னளவு மோவாத (பா-பே)

மூடிப்பார் மும்மலமே முன்புபோ லென்னையுநீ
தேடிப்பார் *காணைய் சிவனறிய - வோடிப்போ
வெட்டரிய மெய்ஞ்ஞான வின்பபரி பூரணத்தி
னிட்டடையிலேல் நட்டமானேன். (221)

* காணைச் (பா-பே)

நின்ற நிலையே நிலையாக வைத்தொருவன்
சென்றபொரு ணின்றபொரு டேர்ந்தபொரு - ளொன்றுமற
வொன்றாக்கி யேயந்த வொன்றற்ற வொன்றதனி
லின்றாக்கி வைத்தா னெனை. (222)

உருவிளக்கும் பொய்ப்பயிர்க்கு முண்மைப்பயிர்க்கு
மிருபயிர்க்கு நல்லவெருவாந் - திருவருளின்
முன்கேடு தானடையும் பெத்தத்தின் முத்தியானிற்
றன்கேடு *மென்கேடுந் தான்

* மாமிரண்டுந் (பா-பே) (223)

என்னுயிரில் வந்திலனே லெங்கே மலவொழிவு
மென்னொழிவு மென்னொழிவிற் றன்னொழிவு - மென்னி
லாராத வானந்த வத்துவித சத்தியமுஞ்
சேரா வனுபூதி யும். (224)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆக்கைதரும் பொய்யறிவை மெய்யறிவா யவ்வறிவை
நீக்கியுணராம னின்றேனே - நோக்கமற
வைத்தவனையோ காலமெலா மேன்றுபார்த் துண்ணின்ற
மெய்த்துணையே யாரொடுநோ வேன். (225)

இவானந்தப் பேறு.

போதானந் தச்சோறு பொங்கியது மங்கைமீர்
மீதா மடுப்பதனின் மீட்கவொண்ணு - வேதாந்தச்
சொல்லி லடைபடிக்கச் சுட்டணுகா* வாருமோ
னல்லபதத் தேயிறக்க நாம். (226)

* வாருமோ (பா-பே)

*நம்மையுனக் குண்மை நவிலக்கேண் மாணவகா
வெம்மையினு நின்னை யிடையறவே - மெய்ம்மையினிற்
செல்லாது பம்பரம்போ லாட்டுஞ் சடசால
மெல்லா மிறந்த விடம். (227)

* நன்மை (பா-பே)

இந்தா வெனதுருவ மிப்படிக்கேண் மாணவகா
வந்தேறி யெல்லாம் வகுத்தகற்றி - நந்தாத
ஞானத்து ஞானே தயமான நற்பரத்தி
ஞனற்ற பூரணமே நான். (228)

நன்றுகேட்நம்மை யுரைப்பக்கேண் மாணவகா
பொன்றுத பாசமெலாம் பொன்றியபி - னின்றவரை
மீதான வானந்த மேவிடுமே வீடதனி
னீதானு மற்றநிலை. (229)

\+ நன்மை (பா-பே)

அன்புடைய மாணவ வநுபூதி வாய்க்குநிலை
யின்பமற நானுனக்குச் சொல்லக்கேண் - முன்புநா
னின்மலபோ தத்திலே நின்றதுபோ னீயென்று
நின்மலபோ தத்திலே நில். (230)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நின்செயலற் றைப்போது நம்முடனே நிற்குநிலை
யுன்செயலற் றேதியட அற்றுக்கே - யென்றுவடங்
கொன்றுமற வொன்றகி யொத்துடனுன் *பந்தத்தி
னின்றதுபோன் முத்தியிலே நில். (231)

* பெத்தத்தி (பா-பே)

+மன்மறைப்பின் மூலமலம் வாழ்கின்ற வாறுபோ
லுன்மறைப்பி லானந்த முண்டாகு - நின்மலமா
நேயத்தே நிற்குநிலை நேராக வாணவத்தி
னீயற்ற தன்மைபோ னில். (232)

\+ மன்மறைப்பின் (பா-பே)

தானெனவொன் றின்றியே தானதுவாய் நிற்பதலாற்
றனவனென் றென்றிரண்டு தானிகழி - னீனங்கா
ணைம்பணைந்த வப்பேய்ந் ததுவா யதுவன்றி
மெய்ப்பொருளி னிற்பதுகாண் வீடு. (233)

கூடாத வீடுனக்குக் கூடுநெறி கூடாமற்
கேடாய வற்பவத்திற் கெட்டழியு - நீடாகேண்
மெய்வந்த வென்போத நின்போதம் போல்விளங்கக்
கைவந்தா லுண்டாங் கதி. (234)

நீயேயெல் லாமறிந்து நீயே யனுபவித்து
நீயேநிற் றெய்வமவே நின்றமையா - னீயான
செய்தியுனக் கில்லாமை தீரவென் றுண்மையதாஞ்
*செய்தி பொருந் தொன்றே சிவம். (235)

* செய்தி பெறுந்தொண்டே (பா-பே)

ஒன்றுசடா சலமொன்றுங் காதியாதே
நின்றபணை தானுகி நில்லாதே - சென்றுசிவத்
தில்லாமை யெய்தாதே யின்பவுரு வாய்நின்றந்து
நில்லாமை தானே நிலை. (236)

உன்னளவில் யானளித்த வுண்மையுரைக்குங்கா
லின்னபடி யென்றுரைக்க *வெட்டாதே - யென்னேயுன்
போதத்தை நீவளர்த்துப் புத்தகப்பே யாய்நூல்க
ளோதிக் காதியா தொழி. (237)

* வெட்டாய்கா - னன்னேயுன் (பா-பே)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூலமல மீதென்ற வப்பொழுதே முத்தனு
யேல வருபவத்தி லெய்தாமல் - ஞாலின்
கிதட்டுரைக்கு கே* நின்று நீ காலங் கழித்த
அதட்டடியா மென்றே யுணர். (238)

* சென்று நீ (பா-பே)

சர்க்கரைத் தித்திக்குமெனச் சாற்றுமொழி யெப்போதுஞ்
சர்க்கரையிற் றித்தித்த றுமோ - சொற்கழில
வோயாம லுன்னிலே யுன்னற்றி லொன்றுபட
நீபோன வின்பத்தே நில். (239)

வாசகமாண் டென்னறிவு மாண்டு நீ யாவையொழிந்
தீசனே நிற்பெருக்கி லெற்காட்டாய் - பாசச் -தா
சிறையா னதுகடன்ற கிற்சொருபா வென்ற
*னிறைவா மறிவெல்லா நீ. (240)

* னிறையா வறிவெல்லா (பா-பே)

பூதஞ்சுடிலும் பொறிபுலனந் தக்கரணம்
போதங் கழித்துநாள் போக்காதே - போதச்
சிறையா நிறைவகலச் சின்மய தேயத்தே
நிறையா நிறைவாகி நில். (241)

ஒன்றாகி லொன்றல்ல வொன்றிரண்டே யாகுமது
வென்று யிரண்டல்ல வெய்தாவா - நின்று
னிலையுண்டு நில்லாமை நில்லாமை யுண்மை
நிலை நில்லா வந்நிலையா நில். (242)

எஞ்சா விரண்டாகி லெய்தாவாம் யானதுளிற்
றுஞ்சாம லொன்றுகிற் றேன்றவா - மெஞ்சா
திரண்டொன்றே யாகிலதுளில்லையா முண்மைக்
கிரண்டல்ல வாய்நீ யிரு. (243)

விண்கண்டார் மண்கண்டார் விண்ணகலார் - மண்ணகலார்
விண்கண்டார் மெய்ஞ்ஞான வித்தகர்தாம் - விண்கண்ட
வந்நிலையே வத்துவிதம்* மாக்கியிடும் போக்கியிடுந்
தன்னறிவின் முற்போதந் தான். (244)

* மாகியிடும் போக்கியிடுந் (பா-பே)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நின்றவும் போனவு நில்லா நிலைமையுற
னென்று மிரண்டாவு முற்பவியா - னென்றவுஞ்
செய்திக் ககப்படான் செய்தியெலா மற்றசிவ
செய்திக்குள் வாழுஞ் சிவன். (245)

ஆதாரவு மெட்டரிய வாதியந்த சூனியத்தி
லோராத வுண்மைப் பெறென்றலவே - நேராக
வொன்றுமிலைக் கொன்றுமிலை யுண்மையா★லுண்டிரண்டு
மொன்றுமிலா வொன்றனை வொன்று.

★ லொன்றிரண்டு (பா-பே) (246)

ஒன்று மிரண்டுமற வொன்றற்ற வொன்றகிச்
சென்றுசிவ மாவார் சிவானந்தர் - மன்றிலுறை
பின்றுஞ் சடைமுடியாய் பேரானந் தப்பயனே
யென்றார் பறவா ரினி. (247)

ஒன்று மிரண்டுமற வொன்றிரண்டு தானுமறச்
சென்றுசிவ மாகின்ற செய்தியற - வென்று
மருளான கேள்வியினன் மாணநீ யந்தப்
பொருளானே னென்றதெலாம் பொய். (248)

உற்றசிவ மொன்றல்ல வொன்றிரண்டு சென்றதல
பற்றிய பற்றையே பற்றல்ல - வெற்றவெறும்
போதங் கடந்ததல போதங் கலந்ததல
யீதொன் றிருந்த படியென். (249)

அப்பொருளே யப்பொருளா மானந்த வுண்மையிலே
யப்பொருளைத் தேடி யடிவாதே - யப்பா
மருளதைய மாட்சியாலே வாராமல் வந்த
பொருளதைய மிந்தப் பொருள். (250)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாணுவினை டொன்றிரண்டு*தானற்ற தற்பரத்தைக்
காணுநெறி காணாதே காதலித்து -மாணுநீ
பாவுற்ற நூல்கிளறிப் பாராதே நின்னறிவு
சீவித்த தெல்லாஞ் சிவம் (251)

★ தானுறுதல் (பா-பே)

பித்தையுடற் கட்டறுத்து மெய்யருளாய் *மெய்யழிக்-இந்
தத்துவமுங் கேவலமுஞ் சார்வகற்றிச்- சுத்தத்
தனியாகித் தானும் போய்த் தற்பரமாய் வட்டாற்
செனியா னிதுசத் தியம். (252)

★ மெய்யொழிக்கும் (பா-பே)

நானுந் பன்முன்னாய் நானுமிது சத்தியமாய்க்
காணும லின்றளவுங் கண்கலங்கி -வீணே
பெரும்பாவி யாய்ப் *பிறந்து பத்தானாய் முன்பின்
திரும்பா யாதுசத் தியம். (253)

★ பிறந்த பித்த பின் முன்னாய்த் (பா-பே)

*ஒன்று கருவிகழித் தொண்பொருளாய் விட்டேனென்
றின்றளவு நீகத்தி யென்பெற்ற -யுன்றனக்கு
நாணுமை சொல்லக்கே னன்மகனே சின்மயினைக்
காணுமை யெல்லாங் கரு (254)

★ ஒன்றுங் கருவொழித் (பா-பே)

சொன்னை முன் பாழிலே தோன்றுகின்ற யென்றதினை
யென்னே மறந்திருணீ யீட்டுவதே -அன்னையேழ்
வீட்டிலே யீசனுக்கு வீடுனக்கு வீடுவரக்
காட்டலே *ஈசாக் கரம் (255)

★ யீசர் கரம் (பா-பே)

மந்திரமாய் நீராடன் மானதத்தை வேருக்கல
வந்தசவு சம்புலன்கண் மாற்றிவிட -லைந்தையுட்
காட்சியே மெய்ஞ்ஞானங் காட்சியினிற் -கற்பனைகண்
மாட்சியே தற்பா வகம். (256)

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

நேயத்துறுதல்.

ஓடியுழன் றிந்த வுடம்பை யொறுத்தே நீ
பாடிமிடற் றைப்புண் படுத்தாதே - கேடுறாற்க்
கும்மால் விளையாதே யொன்றுடனுந் தாக்காதே
சும்மாவே காணுஞ் சுகம். (257)

ஓடாதே தேடாதே யுன்னுதே யோசையெழுப்
பாடாதே சாத்திரங்கள் பன்னுதே - கேடுறாற்க்
கும்மாலே செய்யாதே யொன்றுதே யொன்றுமறச்
சும்மா விருக்கை சுகம். (258)

நீயில்லை நானில்லை யென்றுவு நிற்பரிவன்
* நீயில்லை நானில்லை நேயத்திற் - றாயசிவ
போதபரி பூரணனே யென்றுனின் பூரணம்போ
மேது சொல்லி வாழ்த்துவே னியான் (259)
* நேயமுதலென்றுவும் நிற்பரிவன் (பா-பே)

மந்திரத்தை யோதவே மந்திரமா நின்போதந்
தந்திரத்தைச் செய்குவை யேற்றந்திரமாஞ் சிந்தித்தல்
செய்ததெலா முண்மைச் சிவவிடிப்பா மீங்கிவற்று
ளெய்தலிலை யென்றே யுணர். (260)

செல்லுதலும் புல்லுதலுந் தேடுதலும் வாடுதலுஞ்
சொல்லுதலுந் தாமறவே தூங்குதலு - மெல்லையறக்
கணமொய்த்த நீர்க்குறிப்புங் கம்பலையு மத்துவித
வுண்மைக் கிலை யென்றுணர். (261)

பூசனையும் வாசனையும் புத்தகமுஞ் சாத்திரமும்
* வாசகமா மந்திரமுந் தந்திரமு - நேச
மிறக்கின்ற சிந்தனையு மெல்லாம் பொருளை
மறப்பென்று மாணு மதி.
* வாசகமாந் தந்திரமு மந்திரமு. (பா-பே)
(262)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆயவுணர்ந்த வெல்லாமு மத்துவித மன்றதனை
நீயவுணர்ந்த வெல்லா நினைவல்ல — மாய
மருளாகி நில்லாத வாறுபோன் மாணு
வருளாகி நிற்க வெண்டாம். (263)

என்புருகி யோலமிடிற் சொல்லுளவா மில்லையெனி
லன்புபெறு வன்பர்க் கயலன்று - நின்செய்தி
யவ்வாறவ் வாறென் றாதியலஞ் சண்டாகு
மெவ்வாறு சொல்லே னியான்.

(264)

சொல்லா லுனைத்துதிக்கிற் சொற்போத ஞயொழிவ
னில்லா மனப்பேதை நின்னிலையீ — னெல்லாமு
நின்செய்தி யென்றுரைக்கி னிற்பிரிவ னிர்க்குணனே
மென்செய்வ துன்பா லியான்

(265)

உன்னிலுள முற்பவிக்கி மோதிலுனத் தோசையெழு
மென்னழுய யான்முயலில் யானுனை - நின்னறைவி
னின்றநிலை யெல்லாமு நீக்கமே யாமாகி
லென்றுனையே யென்செய்வே னியான்.

(266)

உன்னை யறிந்திடவு முன்பாலின் பம்பெறவு
மென்னபிழை நாடினே னென்கோவே - முன்னறிவி
ஞனென்று னீயல்லை நாடிலது போலநீ
தானென்று ஞனுளனே தான்.

(267)

சும்மா விருந்தபடி யெப்படியோ வென்றுரைக்கச்
சும்மா திருப்பதலாற் சொல்லுவதென் - செம்மலத்தா
னென்றுங்கா ணப்பெற்ற் லேனடியே னப்பொருளை
யன்றுங்கா ணப்பெற்றேன்.

(268)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொல்லுவான் சுட்டுவான் போனசகா தித்தைச்
சொல்லுவா யென்றுலென் சொல்லுகேன் - புல்லிவிட
வண்மைக்குஞ் செய்மைக்கு மப்பாலா மத்துவித
வுண்மைக்கோ றுத்தரமுண் டோ. (269)

தந்திரத்தால் வேற்றுருவஞ் சாராதே சார்வதற்கு
மந்திரத்தா லுள்ள மறுகாதே - சிந்தித்து
வாங்காதே வையாதே வாராத வாழ்வுவரத்
தூங்கா யதுவே சுகம். (270)

தோத்திரமு மந்திரமு மர்ச்சனையுந் தூயநெறிச்
சாத்திரமு முத்தித் தடையென்றுய் - கோத்தவருட்
போதவழி விற்பொருளே யானந்த பூரணனே
யேதுசெய்வ துன்பா லியான். (271)

புல்லியபொய்ப் போதமறப் போதானந் தப்பொருளை
மெல்லியலா ரின்பமிலா ரென்செய்வார் - சொல்லக்
சூத்திரங்க ளன்பிதற்றி ஞானம் பறிகொடுத்துச்
சாத்திரங்க ளோதுவதே தான்.

(272)

ஒப்பரிய மெய்ஞ்ஞான வுண்மையிலே மோனமுற்
றெப்பொருளு மாகாதா ரென்செய்வார் - செப்பக்கேள்
சாத்திரங்க ளேபிதற்றி* தன்முதலை யோட்டிதற்குத்
தோத்திரங்க ளோத் துவார்.

* தன்சுத்தி (பா-பே) (273)

உன்னுதலுக் கின்னதலாய் நின்றுயை யுன்னுவதை
னென்னுயிருக் கின்னுயிரா மென்னறிவே - துன்னுசட
மெல்லா மழித்திடுதே யென்பரமற் றுன்பரமா
மெல்லா *மழித்திட் டது.

* மிழித்திட் (பா-பே) (274)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காணாத காட்சியல கற்பனைக ளற்றதல
பூணாத பேரின்பப் போதமல - மாணவிங்
கென்னைநீ யுள்ளபடி கேட்டியோ *வெண்ணிறந்த
மன்னுசிவா னந்த மயம். (275)

* னெண்ணிறந்த (பா-பே)

நானு மிறைவனே டத்துவிதஞ் சாதிக்கு மாணவனை
யாணவத்தோ டத்துவித மாக்கினரார் - கோணாநீ
யென்றனை யென்னுனை யேகமிரண் டென்னும்
மென்னுனை அம்மா திரு. (276)

மையலுறு மாயா மயக்கத்தினில் வீழ்ந்திருந்தார்
துய்யநெறி மாணுநீ யோதக்கேள் - பொய்யறிவா
லேனறிவைக் கிள்ளத்தூற் பேயா யுரைத்தற்றால்
நானறிவைக் கிள்ளத்தமோ னம். (277)

ஒன்றி யடுங்கரண மெல்லா மொழித்ததனி
னின்றபடி நின்றவனே நேடிக்கே - ஞன்றன்
பெறுதிக்கு மென்றன் பெருமைக்கு மொப்பு
நறுநெய்க்கிக் கிடம்போ ஞடு. (278)

காயக் கிலேசமறக் கண்ணாளன் வைத்ததில
மாயப் பிறப்பிறப்பு மாறாம - னேயத்
தழுந்தாமை யில்லாமை *வாராத வின்பக்
கொழுந்தாக வைத்தான் குறித்து (279)

* வாராவா னந்தக் (பா-பே)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சார்வறிவுக் கில்லை சமாதியடைந் தாருமென
தாருயரா மீசர் விடா யாருதா - லோருயிராந்
தன்னெய்க்குத் தானே மருந்துபோற் சங்கரனு
மன்னெய்க்கு மன்னே மருந்து. (௨௮௦)

நீயறிந்த தெல்லாமு நீடருளா மாணவங்காண்
பேயறிவ வாழ்ந்ததெல்லாம் பித்தாங்கா - னேயத்
தறிவானற் றப்பொருளை யாரறிந்து காண்பா
ரறிவானை யுண்டுவளர்ந் தால். (௨௮௧)

எல்லா மிறந்தபே ரின்பமா நின்மேனி
யல்லா லெனதறிவுக் காதாரஞ் - சொல்லாய்நீ
யெவ்வடிவ மானாலும் யானறிவ தவ்வடிவே
யெவ்வடிவும் வேண்டே னியான். (௨௮௨)

என்னைநீ யெய்துவதும் யானுன்னை யெய்துவதுந்
தன்னிலற அன்னையனித் தந்தருளா - யென்னிடத்தில்
*வைத்ததோ டஞ்சிவத்தோ டங்களென்ற கற்பனைக
ளித்தனையும் வாரா திட. (௨௮௩)

* கத்திரித்தோ டஞ்சிவத்தோ டங்காமெனுங் (பா-பே)

சத்த நுகர்போதிற் றன்னறிவு சத்தமதா
மொத்தவிதத் தானான வுண்மைபோ லத்த
னருளறிவே யாக வநுபவமே தானாம்
பொருளதுவே யுண்மைப் பொருள். (௨௮௪)

சொற்பிறப்பும் பாவனையாந் தொல்பிறப்பு-*நின்னறிவி
மெற்பிறப்பு #மென்னிறைவி னெல்லையிலா - நிற்பிறப்பும்
போயாவு மின்பமுறி பூரணமாய்ப் பூரணம் போய்
நீயான வன்றோ நிலை. (285)

* நின்னிறைவி (பா-பே)

மென்னறிவி (பா-பே).

அன்புருவா மெய்க்குருவே யானந்த பூரணனே
யென் பழைய பொய்ப் போத மென்றகலும் - துன்பறிவன்
றிட்டா னிலைபிழைத்துத் தானே சிவமாகுங்
கோட்பாடு போகப்போ கும். (286)

*பூதமுதற் றத்துவங்க ளாயவெலும் பொய்க்களைய
நேதிசெய்து நின்மலனாய் நின்றிதெல் - பேதமிலா
நேசத் தழுந்தலினை யத்தனைய நின்றதலா
மீசற் கிலையென் றிரு. (287)

* போதமுதற் (பா-பே).

பற்றில்விழுப் பாயகலும் பார்க்கிலிவ னுண்டாகு
முற்றுணரில் வேறுகு மொன்றுமெனின் - முற்றும்
பிரியாப் பொருள்பிரியும் பேசுமுறைக் கெட்டாக்
குறியாக் குறியாங் குறி. (288)

அகமா னது கழன்ற அத்தவெளி யல்லா
லகமா மெண் சித்திகளாம் யாது - *மிகமா
நாலோக போக்கியமு நல்லமிர்த போகப்
பரலோக முஞ்சொற் பனம்

* மிகவா (பா-பே) (289)

பேராணந் தத்துவத்தும் பேரருட்கை யென்னையுமுன்
றோராத வின்பத் தமுத்தாதோ — சோராதார்க்
கிய்யலா முண்மையனே யுன்னைநான் பெற்றுவந்து
மெய்யெலாம் பொய்யாய் விட. (௨௪௦)

பாய்ச்சுமிகு மால்விடையோன் பாதுகையைப் பாராதே
பேச்செருப்பு நூல்கதற்றுற் பேசாதே - காய்ச்சியபால்
தேனமுது கன்னலெனத் தித்தித்தல் செய்யாதே
யான விருது மின்பா யிரு. (௨௪௧)

ஒன்றுமிலா னென்று ஏழையுணர் வுள்ளதோ
மொன்றுமிலா னென்றே யுரையிறக்கி - லொன்றுமிலா
வொன்றெ மெனிவழ்வண் டுன்னிலையே யென்னிலைமை
யென்றுலென் *சொல்வே னியான்.

* செய்வே (பா-பே). (௨௪௨)

சிற்சுகமே யன்றிச் சிவகதியி னின்னிலைமை
சற்குருவே யென்னறிவிற் றந்தருளாய் - நிற்கதியா
மாலி டொழிவுபெற வாழ்வுபெற வானந்த
மேலீடு தைவல் லியம். (௨௪௩)

தம்பிரான் றன்சதுர்க்குச் சான்றுதவ மிக்கோர்க
ளெம்பிரான் சித்தர்ப்புக் கென்றுணாகதேன் - ~~[illegible]~~ -செம்பகத்தே
யான்வாழச் செய்வார்போ லெங்குமா யென்றுபட
தான்வாழ்ந்து விட்டவர் தான். (௨௪௪)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மன்னு சிவத் துள்ளே பரைவாழு மற்றதன்பான்
முன்னு சிவம் வாழ்ந்து முழுமுதலாம் - சொன்ன
விருவருநம் வாழ்வனியா னெல்லையுற வென்பா
லிருவரும்வாழ்ந் தால்லா றென. (215)

தன்னுதயந் தான்பருவ மிப்படியே சங்கரனுக்
கென்னறிவிற் றோன்றினு னென்பதன்மு - னென்னே
யுலைவின்றிச் சிற்றூற் றுதிக்கும் பிரமப்
* பிரளயம்போ லாவதே பின்.

* பிலயம்போ (பா. பே). (216)

யான்பெற்ற பேறெல்லாம் யானெழுந்து தானாகித்
தான்பெற்று நின்ற சதுர்க்கேநம் - யான்கெட்ட
வென்னிலே யென்னற்று வென்னுதி தன்வரவாய்த்
தன்னிலே யெங்கு நிறைந் தான். (217)

ஆறுக் கப்பாலா மானந்த மாக்கடல்தா
ஞாறு நீந்தி யனைந்திடினும் - வேறுகி
யான்முழுகில் வற்றியிடும் யானென்னுஞ் செய்யாக -கார்
றுன்சுழுத்து மேனிமையே தான். (218)

யானுஞ் சிவனு மிரண்டறவே நிர்குணமா
யீனமில்சீ ரெந்தா மியம்பெனக்கு - ஞானமுதல்
பார்க்குமிவை னேயமில்லை பாராம லேர்புகு
நீர்க்குடம்போ லாங்கா ணிலை. (219)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எல்லா பிறந்த விடத்திலே மும்முதலுஞ்
சொல்லாய்நீ யென்றெனக்குச் சொல்லினாய் — மெல்ல
விதமிக்க யானுரைப்பே னென்முதல்வா கேணீ
சதசத்தா மும்முதலுந் தான். (300)

மும்முதலு நித்த மெனமொழிந்தோ முத்தியினு
மம்முறைமை யாமன்றோ வாங்கதுகேள் — மும்மைக்
கழிவின்மை காட்டுங்கா லாராவா னந்த
மொழிவின்மை யேமுதன்மூன் றும். (301)

இன்பம் பெறலா லுயிரழியா தெப்போது
மென்புருக வானந்த மெய்துதலால் — துன்பற்ற
சோதியி னின்பத் தொலைவின்மை பாசமதா
லோதுமுதன் மூன்று முள. (302)

மன்னித்த மென்னித்த மென்பதனுன் மாணாக்கே
னின்னித்த நீபெற்று நீயிலைகா — ணின்னித்த
மெல்லாமு மன்னித்த மென்னினுனக் கெய்துமா
னில்லா நிலையாகி நில். (303)

ஆணவமே தாயுயிரே தாதிமுத லேதென்று
காணநெடு நாள்விரித்துக் கத்தாதே — மாணாக்கே
னென்போதம் *கீழாமிங் கிப்போது சீவனுமா
நின்போத மும்முதலாய் நில். (304)

* கீழா வியங்கியபோ (பா-பே)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெய்யோன் வரவரவே மெய்ந்நிழலுந் தம்முள்ளே
னைய வொடுங்கும் பகுதிபோ — லைய

னருள்வந் +திணையவே யாணவமாம் போத
மருளுநங் கெடும்போ மறிந்து. (305)

+ திணுகவே (பா-பே)

பற்றியெழு தற்போதக் கற்பனையும் பாவனையு
மற்ற மன வாசகமு மாண்டொழிந்த - வெற்றவெற
மாராத வின்ப அனுபவத்தே மூழ்குதலுஞ்
+சோராமல் வைக்கத் துசம்

+ சாராமல் (பா-பே) (306)

தன்முத்தி வாழ்வே தனிமருளின் முத்தியருண்
மன்முத்தி யென்ற வகுப்புரைக்கிற் - சின்மயத்தே
தம்மைத் தமக்கருதி பெற்றோர்கள் சான்றிந்த
மும்மைக்கு மொன்றே முதல். (307)

தற்காணி லத்துவிதச் சற்கா ரியத்தவறு
மெற்காணி லத்துவித மென்னுகா - சிற்கோவே
யீங்கிவைதா னின்மையிரு ளாணவமா மெவ்வாறு
பூங்கழலி னேயனிற்கும் போது. (308)

பஞ்சாக்கர தரிசனம்

*ஊர்பயின்றாண் கொல்லுவகைக் குண்மை மனமானது போற்
சார்தருநல் லிந்திரியத் தன்னுகர்ச்சி - யாகியருக்
கெவ்வமற வெப்பபோது மின்பமதா கச்செய்யும்
நவ்வெழுத்தென் றுள்ளே நவில். (309)

* ஊர்பயின்றுண் கோலவுகை (பா-பே)

கூடுமனைக் காரிருளை யாளாக்கிக் கூரிருளா
லாருயிரின் ஒலியழிப் பாயிரண்டற் - றேருயராம்
வெவ்வரவி னஞ்சின் மிகுமயக்கம் போன்மயக்கும்
மவ்வெழுத்தென் றுள்ளே மதி. (310)

சொன்னவிரண் டுஞ்செலுத்தித் தோன்றாத் துணையாகித்
துன்னுசட சித்தனைத்துந் தொல்வினைகள் - *முன்னருத்தி
யுய்யுமருள் ஒழிவினை யொப்பாக்கி யொப்புருவாஞ்
சிய்யெழுத்தென் றுள்ளே தெளி. (311)

* முன்னிருத்தி (பா-பே)

சாருயிரின் றன்மைவினை தன்மறைப்புத் *தத்துவம்போய்ப்
பேரறிவு பேரின்பம் பெற்றொளிர - லாருயிர்க்குத்
தெவ்வழித்தல் பாகமிவை சிந்தித்துள் ளேயுறுகும்
வவ்வெழுத்தென் றுள்ளே மதி (312)

* தத்துவம்பொய்ப் (பா-பே)

தற்பரமே *தன்னுளாந் தானு மறியாது
வற்றவட லொத்திட் டவையவையா - முற்செய்வினை
யெவ் வையுந் தேடுமது ளெல்லையிலே மீட்சி -பெறும்
யவ் வருணத் தின்னியல்பென் றெண். (313)

* தன்னளவாந் (பா-பே)

சிகார வகார வியக்கம்.

சிந்தை மனமேறி வாசியிலே யொண்டமிழ்ந்தி
யந்தமிலா வானந்த மானதும் - வந்ததவ
வாராத தன்றுகி மாறு வனுபவத்திற்
சேராமற் சேர்ந்த சிவம். (314)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருநடன பஞ்சாக்கரம்.

ஓங்கார மீதிலகார அகார மகாரப்
பாங்காரும் விந்து பரநாத - மீங்கிதன்மேல்
விஞ்சுதுடி வீசகர மேயமைந்தல் துய்யதமிழ்
இஞ்சிதத்தா ளஞ்செழுத்தாக் கொள். (315)

மன்னு மகார வகார மகாரமிவை
பன்னரிய விந்து பரநாதம் - தன்மிசையில்
நீடுதுடி வாவென்ற னிலென்ற னல்லவன
லாபெத மஞ்செழுத்தே யாம். (316).

ஓங்கார மேமுதலா அற்புத மைந்தினைய
நீங்கா வதன்மே னிறைந்துநிறைந் - தாங்கறிவைத்
தீர்த்தே சிவமுதலாச் செய்யுஞ் சிவானந்தக்
கூத்தேயுன் கூத்தாகக் கொள். (317)

நவ்வழியு மவ்வழியு நாடாதே நாடறிய
வவ்வழியே யவ்வதனை வாவென்று - செவ்வடியான்
சிய்யென்று மோரெழுத்திற் சேர்த்திருந் தென் காழி.
மெய்யருளும் வள்ளல் விரைந்து. (318)

பஞ்சாக்கரத் திருநடம்.

ஒன்றுதரி மொன்றனழைக்கு மொன்றடுத்து மொன்றுசுடு
மொன்றெடுத்துப் பாச மொழிவிக்கு - மன்றிற்
பிறியாத வஞ்செழுத்தாற் பேரின்ப நாடுங்
குறியாத கூத்தின் குணம். (319)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உதறி யழைத்திருத்தி யொண்டியிற் சுட்டுப்
பதற லறுத்தருளைப் பார்த்து — விதறலற
நின்றுனைக் கண்டறிந்து நீயு மழிந்தறிந்தா
லன்றுழ் பிறப்பே யூறும் (320)

சீயென்று நின்றுதனுஞ் செங்கைத் துடிகண்டேன்
வாவென் றழைத்த மலர்கண்டேன் — ஆவியலை
வற்றகையில் யக்கண்டே னங்கியினி னக்கண்டே
னற்பதத்தின் மக்கண்டேன் நான். (321)

நவ்வென்று நின்றெரிய நல்லனல் கண்டேன்.
மவ்வென் றெடுத்த மலர்கண்டேன் — வெவ்விருள்சீ
யென்ற துடிகண்டே னென்னையழைத்த கைகண்டே
னின்றழுத்தும் யக்கண்டே னியான். (322)

சிவாய நலஞ் சொன்னது.

பொற்பொதுவி லாடுமெர னஞ்செழுத்தாற் போதத்தைத்
தற்பரத்தே * போயழுந்தச் சாற்றியடி — துற்பவஞ்செய்
மூன்றிரண்டால் வீட்டியதிற் பின்னிரண்டால் வேதித்துத்
தன்னிரண்டு முன்னிலைதந் தான். (323)

ஓரெழுத்தி லஞ்செழுத்து நின்றது.

பேருகை வஞ்செழுத்தி னுண்மைபெறும் பெற்றிமையிற்
கூறு மொழியருளாற் கூறுங்கால் — வேறுகா
வித்தகமெய்ப் பேரின்ப வேதகமா மஞ்சுக்கு
முத்தியெழுத் தொன்றே முதல். (324)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அநுபோகம்

மேலிடு தானெழுந்தன் மிக்கோங்கி யுண்ணிறைதல்
சால வதிலடங்கல் தானழுந்தன் - மேலச்
சிவமாகி யேயிருத்த லஞ்செழுத்தின் செய்தி
பவமாய முத்தியிலே பார். (325)

தன்னெழுவ தன்னிறைவு தற்பேறு தானழுந்தல்
மன்னு சிவமுதலாய் வாழ்ந்திருத்த — லன்னரிய
வஞ்செழுத்தி னுண்மை யநுபூதி யான்மறைதல்
வஞ்சமற நின்பான் மதி. (326)

திரிபதார்த்தம்.

சிவசிவைதற் போதந் திரோதானம் பாச
மிவையவையே யஞ்செழுத்தி னெல்லை - சிவமிறந்த
வந்தமிலா வின்பத்தி *லஞ்மொழி யாமொழியைத்
தந்தருளா னென்குருநா தா. (327)

* லஞ்சுமொழி (பா-பே).

பஞ்சாக்கரவிசிட்டம்

நெஞ்சா ஞினைய நெறி யுண்டாகி னீள்பிறப்பாம்
பஞ்சாக் கரத்தினருள் பாராம - லெஞ்சா
வெழுத்தென்று கொள்ளி லெரிவாய் நரகில்
விழுத்துஞ் சிவனுணை மெய். (328)

நாவொரு வஞ்செழுத்தை யோதினர் தென்றுரைத்தீ
ரோவாத முத்தரெலா மோதுவதென் — பாவாய்கேள்
சொல்லிறந்த வஞ்செழுத்தைச் சொல்லிறந்த வுண்மையிலே
சொல்லிறந்து நின்றோது வார். (329)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போதானந்த நிருத்தம்

நின்றதறி வீசி நிறைந்தசை விறைவொழிந்தா
னென்றுமலா வொன்றுகி யுற்பவித்தான் – மூன்றிகழு
மீனமற வென்னறிவி லிப்படியே யெப்போது
ஞானநிலைக் கூத்தாடி னான். (330)

குன்று மனவரதக் கூத்துக்கு வாய்த்தவருண்
டன்று மனவரத மாநடமு – மொன்று மறச்
சொல்லா வுணராச் சுகாதீத *மெய்விளைவு
மெல்லாமுன் போதத்தி லே. (331)

*மெய்விளைய – (பா-பே)

ஒத்திருன் வட்டணிந்தா னுள்புகுந்தா னுள்புகுந்து
மெத்திருன் வித்தையெலாம் வேரறுத்தான் – சித்தித்
தொடாமன் மெய்ப்பவிரித் தொம்மென்றான் றில்லை
நடராச னடா நடம். (332)

சிட்டார் மணிமன்றிற் றெய்வவுரு வாடகத்தே
தட்டாம வொட்டாமற் றன்னிறைவி – னிட்டையிலே
நின்ற நிலை *அட்டாம மில்லாமற் புல்லாமற்
சென்றுசிவ மேற்றார் சிவம். (333)

* கூடாம (பா-பே)

ஆறறி வந்தத் திருட்பொதுவா மம்பலத்தே
கூறுத வின்பந் திருங்கூத்தை – வேறுகக்
காணி யிரண்டாகுங் காட்சியறி வொன்றாகுங்
காணிரண் டொன்றறவே காண். (334)

* பராதீத விருத்தம்.

ஞானக்கூத் தன்பாத நண்ணினே னவ்வழி
ஞானக்கூத் தெல்லா மொழிந்தேனே — வானத்
தவராகி யிந்திரனாய் மாலா யயனா
யெவராகி யும்பிறந்த யான். (335)

* வாதனைத்தப் பரமானந்த விருத்தம் (பா-பே)

கற்பனைகள் செற்றிடுமுன் கையிற் றமருகமே
யற்பவநோ யற்றிடநின் *றேதாதோ — பொற்பொதுவி
னில்லா நிலையருள நின்கூத்தை யென்னறிவிற்
சொல்லாமற் சொன்னவனே சொல்.

* [illegible] றெத்தாதோ (பா-பே) (336)

செம்மூனி யுங்கருகுஞ் சின்மயச்செங் கைத்தீயென்
மும்மலமும் வெந்துவிழ மீளாதோ — வெம்மறிவிற்
பின்றுஞ் சடையவிழப் பேரின்பத் தாண்டவஞ்செய்
மன்றுளெய் திருவாய் மலர். (337)

தேசுதிகழ் நின்கரமென் றேசழிக்கும் பொய்யறிவை
வீசியருளே நிறைய வீசாதோ — மாசகற்றுஞ்
சிற்பரனே சின்மயனே சிந்தனைக்கு மெட்டாத
தற்பரனே ஞானக்கூத் தா. (338)

ஆராத வின்னமுதே யஞ்சையப்பா லஞ்செழுத்தின்
சாரா நீநிலை நீ சார்வித்தன் — பேரருளின்
கண்ணாகி நின்னிற் கலந்து *மறைப்போத
நண்ணாமற் செய்வாய் நடம். (339)

* மறப்போடு நமன் (பா-பே)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அணைந்தோர் தன்மை.

பாலருடன் பித்தன்* பசாச னிவை ஞானிக்
கோல வுவமையல வெண்ணியதென் — மேவுணவு
தேடா திருத்தலாற் றீமை நலஞ் செற்றலா
லாடாது தானெழுந்த வால். (340)

* பசாசன் சிவஞானிக் (பா-பே)

வாவிருடு விற்றது மன்னுதிரை யாலவை
மேவிய பொற் காட்சிதரு மெய்யன்று — மேவாத
சுத்தன் பிரபஞ்ச வாதனையிற் றேய்ந்தாலு
மத்தன்மை போலே யவன். (341)

ஒன்றுபோ னின்றவல கிண்ணுமுபா யத்தையுனக்
கின்றுநா னோதக்கே ளென்பதல்வா — அன்ற
னினைஅக்கி மெட்டாத நின்மலபோ தத்தைக்
கனவுக்கிச் சாக்கிரம்போற் காண். (342)

சாக்கிரத்தே யுற்ற வதீதன்சகல வாதனையிற்
றாக்காமை தாக்கறத் தான்சரித்தல் — நோக்குங்கான்
மற்றவன்றன் செய்திமது மாந்தியிடு மாந்தர்வர்க்
கற்றுமுடை யன்மைபோ லாம். (343)

பொய்யுதய மெய்யுதயம் பொய்யுதயப் போக்கொழிவின்
மெய்யுதயந் தானே வியாபகமாம் — மெய்யுதயப்
போக்கொழிவே பூரணபோ தானந்தம் பூரணத்திற்
றாக்கொழிவே யன்பவதீ தம். (344)

ஆராவா னந்தமய மல்லாது நீயென்னும்
பேராது நாமென்னும் பேர்பிகழ் — னேராக
*நெய்க்கிற்ற கோதுமம்பா லடைதனி னில்கோதுந்
தக்கிருக்கு நல்லுளவேற் றன். (345)

*நெய்க்குழைந்து கோதுமபா லேடதனி னில்கோலந் (பா-பே)

மூடம்படு மாய்ப்பார்போன் முற்றுமருளாகுவர் பின்
மெய்ம்மையறி வாகாமன் மெய்யுணர்வர் — தம்மை
யறிவாரைப் போலே யறியாரா னந்தம்
பெறுவாரைப் போலே பெறார். (346)

காயாதி கண்மெய்க்கிற் கட்டுண் டசித்தவண்ணா
யோயாமல் வாழா துழன்றலைதல் — மாயா
மருட்போதர்க் குண்டாகும் வாக்குமனந் தீண்டா
வருட்போதர்க் கில்லை யறி. (347)

நாலுமறை யந்தத்து நாதாந்த வுண்மையினுஞ்
சீலமிழந் தொன்றிய சிற்பரத்து — மேலொடுக்கி
செல்லா திறந்தபரி பூரணத்தும் யாவையினு
நில்லார்கண் மெய்ஞ்ஞா னிகள். (348)

நீக்காத அண்மையணி *னிற்பேதையை நீடறந்தங்
காக்காத போதாமேல் ஏற்பதங்கேள் — வாக்குமனந்
தட்டாத தற்பரத்திற் றன்னுனை யென்னுனை
கிட்டார் சிவயோகி கள் (349)

*னிற்போனை (பா-பே)

தாணுவினற் றாள்சென்று சார்ந்தவர்கள் தம்பிரா
னண சிவயோக ராவரெனி - லாணவத்தின்
சுட்டாய போதப் பயனுய அட்டறிவிற்
கிட்டார் சிவயோ கிகள். (350)

பாவனையொன் றற்ற பராபரத்தைச் சென்றுழந்தி
யோவியமே போலிருந்தார் யோகிகளென் - றியாவை
-யினுந்
தட்டாத வுண்மைத் தனிமுதலை யெஞ்ஞான்றுங்
கிட்டார் சிவயோ கிகள். (351)

துஞ்சுமுடற் பொய்ம் மயக்கந் தோன்றுதுயர்* தீவளர்த்தோ
விஞ்சு கடல் வாய்ச்சுழியின் வீழ்ந்தோ - னஞ்சுமிழுங்
கூரரவின் வாய்த்தவளை கொல்புலியின் கைப்பட்டோன்
காரிடமே யூற்றவனேக் கம். (352)

* தீவினைத்தோன் (பா-பே)

தாகமிலை தாகந் தணிக்கின்ற போசனமாம்
போகமிலை சந்தோட புந்தியிலை - மோகமிலை
முக்கால முங்கடந்த முத்திச் சிவானந்தர்க்
கெக்கால முட்பட் டினி. (353)

மல்கா விழியருவி வந்திழியச் சிந்தையவிழ்ந்
தல்கா* வநுபோக வற்புதரே - பல்காயந்
துன்று கதி பாறயிர்நெய் சோறுமிகத் துய்த்தாலு
மென்றுமெமக் கிப்பட் டினி. (354)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*தார்க்கட்டில் தூசி தலையணைதோள் +கையணையா
மேற்கட்டி விண்கவிரி வீசுங்கா — வேற்றி
விளக்கிரவி யிந்து மணைதுறவா மெய்யே
யுளக்கண் விழித்துறங்கு வோர்க்கு. (355)

* கார்க்கட்டில். (பா-பே) + கையிணையா (பா-பே)

உண்ட வுலகனைத்து மூண்ணுத வொருணவா
யுண்டி பிரியாத வத்தமர்தாந் — தொண்டொழியத்
தம்மறிவு தோன்றியெதிர் சார்வுபெறு வாய்மையெனத்
தம்முதலுங் குண்மறைவர் தாம். (356)

ஏ.றுபடா வின்புறுத லின்மாதல் தற்போத
நாறிலற மாண்டு நடுங்கிடுதல் — பேறொழிதல்
மெய்ப்பொருட்க ணின்றவருள் வித்தகருக் கீங்கிவையாந்
துய்ப்புறக்க ணைமை துனம். (357)

கூடசாடம ஞானுணர்வாற் கொண்டாடித் தர்க்கித்து
வாசாஞா னங்கதற்றி மாளாதே — தேசிகன்பாற்
*றுய்போன்ற வத்துவிதத் தற்பரையை யப்பிறவிப்
பேய்போக வென்றுகாண் பேன். (358)

* றுய்போன (பா-பே)

ஏட்டைப் படித்தலற்றி யேதுக்கள் பற்பலவுங்
காட்டித் தலைதிமிரக் கத்தாதே — கூட்டறுத்த
வாசானே நீதந்த வத்துவித வுண்மையினைப்
பேசாதே யென்றுகாண் பேன். (359)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பத்திக் கடல்புரளப் பாயருவி கண்சோரச்
சித்தத் தெளிவுவருஞ் சின்மயகேண் — முத்திக்
குபாய நெறி யாவுரைக்கி லொன்றுமற வுன்னைச்
சிவாய நம வென்றே தெளி. (360)

ஏகமிரண் *டெண்ணாத வத்துவித வின்பொழியத்
தேகமுத லற்பவிக்குந் தேகாதி — போகமெலாங்
கான்றசோ றாகியிடக் கண்டுமதன் கண்படுதல்
கான்றசோ றுவதுவே காண். (361)

*டெண்ணாத (பா-பே)

பொங்குபுழுக் கூடுதரும் பொய்ப்போதக் கூற்றுவினைச்
சிந்திகொள வல்லவனே சீமானென் — றங்கவனை
யும்பர்க் கிறைதிருமா லோதியநால் வேதமெலாங்
கும்பிட்டு நின்று துதிக் கும். (362)

அறிவென் றுன்னையறிந்தா லானந்த போதச்
செறிவும்பொய் யாணவத்திற் சேர்வும் — பிறிவும்பொய்
யாறு விதாகிதத்தி லாட்டுங் கருவினி
போனவும் பொய்பொய்பொய் பொய். (363)

கண்ணிமைக்கு மந்நேரங் கற்று முலையிற்பால்
துண்ணென வீழ்போது *அகம்வீழ்வோ — ரண்ணலருட்
டாணிழலிற் றுமறவே நின்றிடுவா தம்பிரா
னுண்ண பிறவா ரவர். (364)

*அகம் விழைவோ (பா-பே)

தற்றெளிதல் தன்னழிவு தன்னழிவிற் றன்முதற்கே
யுற்றுருகி யென்று *யொழிதலு மாஞ் - சிற்பரத்தே
யுற்றோர் போதத்தி னுண்மையனே யாவையினும்
பற்றற்றா ரென்பார் பயன். (365)

* யொழிந்தாலும் (பா-பே)

பற்று மறிவழியப் பார்த்தநிலை பாராத
சிற்பரமா முண்மைச் சிவானுபவத் - துற்றுவளர்
தம்பிரான் றானடைந்தோர் தாம்பிறவார் தாண்டவஞ்செய்
தம்பிரா னார்சீபா தம். (366)

தீதார்ந்த சித்தியினும் யோகத்துஞ் சிற்குணத்து
நாதாந்த முத்தியினு நந்தாதே - வேதாந்த
போதத்தே தற்போதப் பொய்யொழியப் போகும்பொய்ச்
சாதத்தே பற்றியவச் சம் (367)

* தேர்ந்தப்பேய் பொழியப் (பா-பே)

தன்னைத் தருவோர்க்குத் தானுந் தனைத்தருவ
னென்னைத்தா னென்பார்கட் கேதோ — வுன்னிற்
புனிதகதி பூரணனே போகியுடன் போகந்
தனிமுதல்வ னாதலினாற் றான். (368)

அத்துவித வுண்மை பஞ்சகிருத்தியம்.

தஞ்சார்வார்த் தட்டா னெனநின்னைச் சாற்றுநெறி
நெஞ்சா னினைவற்றே *னின்மலனே — னெஞ்சாதே
தன்னை யழித் தெற்பண்ணித் தன்னி லெனையழித்துத்
தன்னை மிகப் பண்ணுதலாற் றான். (369)

* னின்மலர்தா (பா-பே)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உற்றமலந் தானதந் தற்றதுந்த வற்றதுந்த
வற்றநிலை போதமிரு ளற்றிருத்தல் — சொற்றதெலாஞ்
சேரப் பொருளாக்கிச் சேட்டித்த லிங்கிவை சங்
காரத்தி லைந்தொழிலே காண். (370)

ஞான பூசை

காணாதே தீண்டாதே கண்ணாதே யுட்புறம்பு
பேணாதே மந்திரங்கள் பேசாதே — தாணுவைநீ
யாக்காதே யானந்த மாகாதே யாதாரமா
தாக்காதே வாழ்வதுபூ சை. (371)

ஊட்டுந்தாய் சத்தா ணுணர்வா மொருதமையன்
வாட்டமறத் தேட்டமற வந்துதித்தான் — கேட்டருளாய்
நித்தனுநா னுசூச னின்பாத பூசனைக்குச்
அத்தனே வல்லனே சொல். (372)

எங்கிங் கெனமொழிய வில்லையவன் றன்னிணை
யங்கந் திரள்கருவி யானவைமாம் — பொங்கிமிருள்
மைசெய்த மாமாயை மாயைவினை மற்றனைத்தும்
பொய்பொய்பொய் பொய்பொய்பொய் பொய். (373)

உற்றசிவா னந்தமிலாப் பூசை யுயிரில்லா
வெற்றுடலம் பாலற்ற மென்முலையா — முற்றுமிசை
நாதந்தா னற்றயாழ் நற்பொருளில் லாதவுரை
வாசந்தா னில்லா மலர். (374)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எங்குஞ் சிவாலயமா மெங்குஞ் சிவமாகு
மெங்குஞ் சிவனடிமை யெங்குமாய்ப் — பங்கறவே
நிற்றல் சிவபூசை நின்றநிலை யாய்நிறைவிற்
பற்றொழித்தல் பூசா ~~[illegible]~~ பலம் . (375)

என்னொழிய வில்லாத வின்பமுத னீயதுபோ
லுன்னொழிய வில்லாத வொண்பொருளே — யென்னுயிரே
நின்மலமே யாய்நிறைந்து நீயிருப்ப நாயடியேன்
றன்மலமே யாகியவா சொல். (376)

ஈரார் பதினெண் புராணஞ் செழுமறைநூ
லாராத வாகமங்கற் றாய்ந்தறிந்தும் — நேராகச்
சங்கரன் றாளிணைக்கீ ழன்பிலனேற் சண்டாள
னங்கையனிற் பாகீ ரதி. (377)

சச்சிதா னந்தத் தனிமுதலாந் தன்முதல்பால்
அர்ச்சியா வர்ச்சனையை யாதிகுரு — அற்பவித்தே
கொட்புறுபொய்ப் போதமறக் கூறியபின் *வேறுதரு
முட்புறம்பா மர்ச்சனையற் றேம். (378)

* பேறுதரு (பா-பே)

மாறு மலக்கரத்தாற் பூசிக்கின் மாநரக
மேனு நரக மிடக்கரத்தாற் — கூறுத
வஞ்செழுத்தை நாவா லறைகுவமே யாமாகில்
வெஞ்சுபிறப் போதாய் விடும். (379)

சைவசித்தாந்தம்

ஏகமல வென்று மிரண்டன் றிரண்டற்ற
போகமல பூரணமாம் போதமல — தேகாதி
போகமே பொய்யாம் பொருண்மேற் பரிபாகத்
தாகமே சைவசித்தாந் தம். (380)

ஆதிசுத்தன் செய்தவரு ளற்புதத்தை யென்னுரைக்கேன்
போதமற வென்னுட் புகுந்தருளால் — வேதகஞ்சே
யத்துவிதி ஞானவலனீ யானந்தி யாதலினு
லத்துவிதி நீயேயென் றுன். (381)

ஏகமிலா வத்துவித மென்னை யறிவி லெய்தாமன்
மாகமுதற் றத்துவங்கண் மாய்வித்து மோகமிகு
மெய்யொழித்து மெய்யுணர்வை மெய்யுணர்வால் வேதித்துப்
பொய்யொழித்துப் போக்கினனென் போதம். (382)

அறிவ தொழிலொத்தா லஞ்சிலைந்தா லாதுஞ்
செறிவசிவ தத்துவமாய்ச் சேர்ந்தோன் — பிறிவின்றாஞ்
சுத்தமிவை யைந்துக்கு மப்பாலாந் தூயோனே
மத்துவிதா னந்தனு வான். (383)

அத்தனுட னென்றிரண்ட தாகா திரண்டற்ற
வத்துவித மேதென்றி யாங்கதுகேள் — சுத்தக்
கதிரிரவி சேரவங் காரிருளைக் காயு
மதியரவம் போலே மதி (384)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*துன்றுமல போதத் துரிசறவே யத்துவித
வுன்முதலுன் பாவுடனே யுற்பவிக்குந் - தன்மைசொலிற்
காட்டமறை செந்திக் கடைகாலே வெம்மையைப்பின்
கூட்டியெழல் போலவே கூறி. (385)

* துன்மலபொய்ப் — (பா-பே)

கைம்மாறு

தன்னடிமை முன்னாக்கிச் சற்புத் திரனாக்கி
மன்னுமுயிர்த் தோழனுமா மாறளித்துப் - பின்னையிவை
யித்தனையும் *வேறாக்கி யானீயே யாமென்று
மைத்தனுக்குக் கைம்மா றது. (386)

* பொய்யாக்கி யானீநா னென்று (பா-பே)

தானிருந்த தன்மையெலா மியானென்ற சங்கரனுக்
கியானிருந்த தன்மை யிழப்பதலால் - யானேதுங்
கைம்மாறு கண்டிலேன் கற்பனைக ளற்றானுக்
கைம்மால் வழியா டிது. (387)

வாராமல் வந்தவர்க்கென் மாட்சியிலே காட்சியறத்
தாராம லுள்ளபடி தந்தவர்க்குத் - தீர
வடிப்பதுமந் தடின்மினை யாக்கினற்குத் தன்னைக்
கொடுப்பதுகைம் மாறதுவா கும். (388)

தன்னிலையே தன்னைப் பெறுதியெனத் தாளளித்திட்
டென்னை யறவொழித்திட் டெல்லையிலாத் - தன்னிறைவ
தானகம் பேரின்பந் தந்தவர்க்குக் கைம்மாறிங்
கானத [illegible] வின்பொழிவே யாம். (389)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாட்சிதரு மன்றுசிவ கேவலத்தின் வாய்மையை நின்,
முட்கலந் தாரகமாய்த் தாகுமே — காட்சியுற
லெல்லாமும் போயிறந்த வின்பாதீ தத்தொன்று
மில்லாமை கைவல் லியம். (390)

சார்வறிதல் சார்பொழிதல் தன்னறிதல் தற்பேறு
பேரறிவு நேயம் பெருகுநிலை — யாருயிருக்
குய்வந்த வின்புறுத லோரெட்டு மாயையாம்
போய்வந் துறப்பறந்து போம். (391)

என்னழிய நின்றுடு மின்ப நடம் வல்லானுக்
கென்னுழியே யம்பலமா மென்றுதலுக் — குன்னிய
வேத்துக் கெழுத்தஞ்சு மானே யிறவாத
கூத்துக்கென் போக்கே கொடை. (392)

குருலிங்க சங்கமம்

காட்டு மருளெல்லாங் காட்டுங் குருவாகித்
தேட்டமிலா வின்பஞ் சிவலிங்க — மீட்டியபே
ரானந்த மொன்றுக்கொன் றெவ்வாமை யாகுமது
தானந்த மெய்வேடந் தான். (393)

நெஞ்சிற் கமைவுரை.

உப்பகன்ற நீர்க்கூடு முண்டாற் பசிகெடுமோ
வப்பதுண்டு கூவல்குள மாறதனி —*லிப்படியைப்
பார்த்தமையாய் நெஞ்சே பரந்தெழுந்து சென்றாலும்
பேர்த்துளதின் மேல்வருமோ +பேசு. (394)

* லிப்படியே (பா—பே) + பேறு (பா-பே)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பல்காய நற்கறியும் பானெய்பழத் தோட்டியில்
செல்வாய தேயஞ் செறிந்தாலு — *மெல்லவினை
யூட்டாவூ ணுண்டே யுறுபிணிமற் றியாதொன்றல்
வீட்டாதோ நெஞ்சே விரைந்து. (395)

* மொல்லவினை (பா-பே)

நல்ல வுருசுவையு நாவினுனி மாத்திரமே
யெல்லை யிருவிரலே யல்லதில — மெல்ல
விருவிரலைத் தான்கடக்க மாட்டாதே நெஞ்சே
பொருகடலைத் தான்கடப்பாய் போய். (396)

ஆடை யழுகினைநன் காதரித்தே யாங்கதற்கென்
றோடி யுருபொருளுக் கிற்றுழன்றாய் — கூடியதேல்
வண்ண வெளிமருவா *வைப்பிடமற் றின்னவற்றி
னெண்ணமே நெஞ்சே யடர். (397)

* வைப்பிடத்திற் கேடதனை (பா-பே)

கந்தையொடு வெண்ணீறு கன்மனைபாழ்ங் கோயில்பல
சூந்தையுள சீத முறுமென்னில் — வெந்துயரக்
கோடையினிற் கோவணமுங் கூடமிகை யித்தனைகா
னடையினிற் காரியந்தா னென்கொ. (398)

நீயா யனையாய் நினைந்தொழிக் கிட்டானை
*யேயா வனைமந்தா யடர்நெஞ்சே — †காயோ
கடையாளர் காய்பசிக்கே கால்குலைவர் கற்றே
ரடையாரோ வாங்கனையின் பால். (399)

* யோயாளை யாயா யுயர்நெஞ்சே (பா-பே)

† சாயோர் (பா-பே).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடையாதே பெற்றதனை யாங்கூங்கு நன்றென்
றிடையா தெழுந்தோடு கின்றாய் — சமையாச்
சிறுமைக்கு வித்ததுவாந் தேறாய் மனனே
மறுமைக் கஃதே மறைப்பு (400)

ஆற்றங் கரைப்பசுத்தா னக்கரையோ டிக்கரையிற்
றோற்றும் *பசும்புற் றொடர்வதுபோ — லாற்ற
வதுவேபோ னெஞ்சே யினைந்தலைப்பட் டோடு
மிதுவே யுனக்கிதனாற் பேறு (401)

*பொசிப்பை (பா-பே)

இருந்தவிடத் தேதும்வாக் கண்டிருப்ப தன்றே
பெருந்தகைமைக் காரணமாம் பேதாய் — மருந்தெனவே
யாங்கினியார் தங்கடையிற் சென்றிடினுங் காதலியார்
பாங்கிதுகாண் பாழ்நெஞ்சே பார். (402)

உணர்ந்தார்க் குடம்புபகை யென்றே *யுலக
முணர்ந்தா ருணர்ந்தே யுரைத்தா — ரிணங்காம்
பொருண்முழுதும் விட்டாலும் பொய்யுடம்பிற் காதல்
மருளதுவா நெஞ்சே மறித்து. (403)

* யுடல (பா-பே)

இல்லாத தில்லை யுளதுகவி றாதென்று
நல்லார் துணிபொருளை நானெங்கா — னெல்லா
மமைத்தபடி யேவருமா *லாங்கதைவென் னெஞ்சே
சமைத்தபொரு டாமறிவார் தாம். (404)

* லாங்கமைக (பா-பே).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இங்கேதன் னாருயிரை யேதமறக் கண்டவிடத்
தங்கே யெலாமமைய லாயிருக்க — வெங்கேனுங்
காடு மலையுங் கடந்துடம்புக் காவருந்தி
யோடுவதே னெஞ்சே யுரை (405)

அமைதற் குபாய மறிந்திட நீ வேண்டிற்
கமையுற்ற ஞானக் கரும்பைத் — தமையுற்ற
வாரியர்பாற் பெற்றங் கவரடிக்கே யேவலினை
யோரியல்பாய்ச் செய்நெஞ்சே யுற்று. (406)

நீயெந் தலைகீழ்க்கால் மேலாக நின்றாலுங்
கூடும் படியன்றிக் கூடாதா — லோடி
வருந்தாம லுள்ளபடி வந்திடக்கண் டாறி
யிருந்தாலோ நெஞ்சே யினி. (407)

நல்லாரை மேவி நலங்கிடக்க வந்துள்ள
பொல்லாங்கு கொண்டாடிப் போகாதே — யெல்லா
மருளியவா செய்தங் கலைதொழிநீ நெஞ்சே
பொருளியல்வே றில்லையினிப் போற்று (408)

வையுதலும் வாழ்த்துதலும் வார்த்தையினிற் *கற்பித்து
நையுமது நெஞ்சே நலமன்று — வெய்தும்
புரையிடத்து வாயுப் புரைக்குமொலி யென்றே
யுரையிடத்துக் கோளொழிநீ யுற்று. (409)

* றர்க்கித்து (பா-பே)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்பதுவா யாலே மலஞ்சொரியு மூத்தைகமழ்
புன்புலனயங் குற்ற புழுவுடம்பை - யன்புடனே
யேத்துவார் வைவா ரிழிவுரைப்பா ரல்லதா
ராத்தமா மெய்யுணர்வார்க் காங்கு (410)

வாயுவன னீர்பிணிதான் மற்றும் பலபலவா
மாயசட வேதுவினை லாம்பயனுக் - கேயவொரு
செற்ற நலங் கொண்டிலையே சேதனமே சுத்தனையு
மற்றவனை நெஞ்சே மதி. (411)

ஆர்வமொடு செற்றத்தை யாரிடத்துங் கொள்ளாதே
சாரமுள்ள தெவ்விடத்துந் தான்கொண்டு — தீரவுணர்
நல்லோர்தஞ் சொல்லை நழுவாம னன்னெஞ்சே
நில்லா யிதுவே நிலை. (412)

பெற்றதுவே கொண்டமைந்து பேரிழவுக் கொல்காதே
குற்றநல மென்கோள் குறுகாதே — மற்றும்
பயனின் மொழியாதே பார்த்துளமே நல்லோர்
நயமுமற வாதே நட. (413)

பொய்க்கனவும் பொய்த்தேரும் போலுமுடல் போமளவுஞ்
சிக்கெனவே நாதன் திருவடியை — நெக்குருகிப்
பூண்டுவிடா தேகிடந்து போற்றியடு நெஞ்சேநீ
மீண்டுபிற வாதே விட. (414)

ஆண்ட வியல்பை நினைந்தே யுள்ளுருகி
வேண்டுமிக மெய்யன்பை மேன்மேலு — மீண்டு
வழியாதே பூண்டமைவா மாறருளை நெஞ்சே
யொழிவறவே நீயுண் டுரு. (415)

சிவானந்தமாலை முற்றும்

Meenakshisundaram
Adeena Vidvan
12.10.58

In Public domain. Digitization Muthulakshmi Research Academy